بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 24

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

29 ரம்ஜான் 1439 ஹிஜ்ரி கமரி 14 இஹ்ஸான் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

14 ஜூன் 2018


## அல்லாஹ்வின் கட்டளை

اَلْحَجُّ اَشْهُرٌ مَّعْلُوْمٰتٌ ۚ

فَمَنْ فَرَضَ فِيْهِنَّ الْحَجَّ

فَلَا رَفَثَ وَلَا فُسُوْقَ ۙ وَلَا جِدَالَ فِى الْحَجِّ

ஹஜ்ஜின் மாதங்கள் நன்கு தெரிந்தவையே. ஆகவே, அம்மாதங்களில் ஹஜ் செய்ய உறுதி எடுத்துக் கொள்பவர் ஹஜ்ஜில் பாலுணர்வு பற்றிய பேச்சும், எவ்வித வரம்பு மீறலும், எவ்வித சச்சரவும் கூடாது என்பதை (நினைவில் கொள்ள வேண்டும்).

(அதிகாரம் அல் பக்கரா : 198)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வொரு அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**நீங்கள் உங்களது ஐந்து நேரத்தொழுகைகளை இறைவனைப் பார்ப்பது போல் பயபக்தியுடன் தொழுது வாருங்கள். மேலும் உங்கள் நோன்புகளை இறைவனுக்காக முழு மனதுடன் நிறைவேற்றுங்கள். ஸக்காத் கொடுக்க தகுதியுள்ள ஒவ்வொருவரும் ஸக்காத்து செலுத்துங்கள். எவர் மீது ஹஜ் கடமையாக்கப்பட்டிருக்கின்றதோ அவருக்கு எவ்வித தடையும் இல்லையென்றால் ஹஜ் செய்ய வேண்டும். நன்மைகளை அழகுபடுத்தி நிறைவேற்றுங்கள். தீமைகளை வெறுத்து விடுங்கள்.**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...**

இவ்வுலகமானது ஆயிரக்கணக்கான ஆபத்துக்கள் சோதனைகளால் நிரம்பிய இடமாக இருக்கின்றது. அவற்றில் ஒன்று பிளேக் நோயும் ஆகும். ஆகவே இறைவன் இந்த ஆபத்துக்களை உங்களிலிருந்து தூரமாக்கும் பொருட்டு அவனோடு உண்மையான உள்ளத்துடன் உறவு வைக்க முயலுங்கள். வானத்திலிருந்து கட்டளை பிறப்பிக்காதவரை எவ்வித ஆபத்தும் பூமியில் உண்டாவதில்லை. மேலும் வானத்திலிருந்து கருணை இறங்காதவரை எந்தவோர் அபாயமும் நீங்குவதில்லை.

ஆகவே நீங்கள் கிளையை பிடிப்பதற்குப் பதிலாக வேரை பற்றிப் பிடிப்பதே அறிவுடைமையாகும். மருந்தையும் இதர வழி முறைகளையும் பயன்படுத்துவதற்கு நீங்கள் தடை செய்யப்படவில்லை. ஆனால் அவற்றின் மீது முழு நம்பிக்கை வைப்பது தடை செய்யப்பட்டிருக்கின்றது. இறுதியில் இறைவனது நாட்டம் எதுவோ அதுவே நடக்கும். ஆற்றலுடையோருக்கு இறைவன் மீது தவக்குல் (நம்பிக்கை) வைப்பதே எல்லா உயரிய நிலைகளை விடவும் சிறந்த நிலையாகும்.

உங்களுக்கு கூற வேண்டிய முக்கிய போதனை என்னவெனில், திருக்குர்ஆன் ஒதுக்கப்பட்ட வேதத்தைப் போல் கைவிட்டு விடாதீர்கள் என்பதாகும். ஏனெனில் உங்களின் வாழ்வு அதிலேயே அடங்கியிருக்கிறது. எவர்கள் திருக்குர்ஆனை கண்ணியப்படுத்துவார்களோ அவர்கள் வானத்தில் கண்ணியப்படுத்தப்படுவார்கள். எவர்கள் ஹதீது மற்றும் பிற சொற்களை விட திருக்குர்ஆனுக்கு முக்கியத்துவம் அளிப்பார்களோ அவர்கள் வானத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படுவார்கள்.

**பூமியில் திருக்குர்ஆனைத் தவிர மனித குலத்திற்கு வேறு எந்த வேத நூலும் இல்லை. ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர ஆதமின் சந்ததிகளுக்கு இனி எந்த இறை தூதரும் பரிந்துரைப்பவரும் இல்லை. ஆகவே நீங்கள் இந்த மாபெரும் கம்பீரமான நபியுடன் உண்மையான நேசம் கொள்ள முயலுங்கள். அவருக்குக் கொடுக்கப்படும் மதிப்பை விட மேலான மதிப்பை வேறு எவருக்கும் கொடுக்காதீர்கள். அப்போதுதான் நீங்கள் வானத்தில் இரட்சிக்கப்பட்டவர்களாக எழுதப்படுவீர்கள்.** இரட்சிப்பு என்பது மரணத்திற்குப் பின் வெளியாகக் கூடிய ஒன்றன்று என்பதனை நினைவில் கொள்ளுங்கள். உண்மையான இரட்சிப்பானது தன் ஒளியை இவ்வுலகிலேயே வெளிப்படுத்திக் காட்டி விடுகிறது.

**இரட்சிப்பு பெற்றவர் யார்? உண்மையான இறைவன் ஒருவன் இருக்கிறான் என்றும் இறைவனுக்கும் அவனது அனைத்து படைப்பினங்களுக்கும் இடையில் பரிந்து பேசக்கூடியவர், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களே என்றும் வானத்தின் கீழ் அவர்களுக்கு சம நிலையிலுள்ள வேறு எந்த நபியும் இல்லை என்றும் திருக்குர்ஆனுக்கு ஒப்பான வேறு எந்த வேத நூலும் இல்லை என்றும் நம்பிக்கை வைக்கக்கூடியவர்களே இரட்சிப்பு பெற்றவர்கள் ஆவர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எவரும் என்றென்றும் உயிர்வாழ வேண்டுமென்று அல்லாஹ் நாடவில்லை. இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த திரு நபி (ஸல்) அவர்கள் நிரந்தரமாக உயிரோடு இருக்கிறார்கள்.**

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

## காதியானில் 124 –வது ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் காதியானில் நடைபெறும் 124 –வது ஆண்டு மாநாடு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28, 29, 30 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நிய்யத் வைத்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்கு காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா.

(நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா காதியான்)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களான ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹஷ், ஹஸ்ரத் கஅப் பின் ஸைது, ஹஸ்ரத் சாலிஹ் ஷுக்ரான் மற்றும் மாலிக் பின் துஹ்ஷம் ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் ஆகியோரின் வாழ்க்கை வரலாறு தொடர்பான ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்வங்கள் பற்றிய நற்குறிப்பு மற்றும் ஜமாஅத் அன்பர்களுக்கு முக்கிய அறிவுரை**

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**11 மே 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **11 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أشهد أن لا إله إلا الله وحده لا شريك له وأشهد أن محمدا عبده ورسوله
أما بعد فأعوذ بالله من الشيطان الرجيم ۔ بسم الله الرحمن الرحيم
الحمد لله رب العالمين ۔ الرحمن الرحيم ۔ مالك يوم الدين ۔ إياك نعبد
و إياك نستعين ۔ اهدنا الصراط المستقيم ۔ صراط الذين أنعمت عليهم
غير المغضوب عليهم ولا الضالين ۔

இன்று நான் எடுத்துச் சொல்லவிருக்கிற சஹாபாக்களுள் முதலில் ***அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ்*** பற்றி கூறப்போகிறேன். அப்துல் முத்தலிப் அவர்களின் மகளான உமேமா அவர்களது தாயாவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பெரியம்மா ஆவார்கள். இவ்வாறு அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பெரியம்மாவின் மகன் ஆக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்க்கம் செல்லும் முன்னரே இவர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்தார்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 89 அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ், 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

தாரே அர்க்கம் என்ற வீடு அல்லது தலைமையகம் என்பது அர்க்கம் பின் அர்க்கம் என்ற ஒரு புதிய முஸ்லிமின் வீடாக இருந்தது. அங்கு முஸ்லிம்கள் ஒன்று கூடினர். மக்காவிற்கு சற்று தொலைவில் இருந்தது. மார்க்கத்தை கற்கவும் இறை வணக்கம் செய்யவும் அவர்களின் தலைமையகமாக இருந்தது. அதனால்தான் அது தாருஸ் ஸலாம் – அமைதியின் வீடு என்றும் பெயர் பெற்றது. மூன்று வருடங்கள் வரை மக்காவில் அது தலைமையகமாக இருந்தது. அங்கிருந்து அமைதியாக இறைவணக்கம் செய்து வந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சபையும் அங்கு கூட்டப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு முஸ்லிம்கள் பகிரங்கமாக வெளியில் வரத் தொடங்கினர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவ்விடத்தில் இஸ்லாத்தை தழுவியவர்களின் கடைசி நபராக இருந்தார்கள் என அறிவிப்பில் வருகின்றது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் சாஹிப் (ரலி) M.A அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 129)

எவ்வாறிருப்பினும் அது தலைமையகமாக ஆவதற்கு முன்னரே ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹஷ் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டார். பிறகு அறிவிப்பில் வருகிறது. இணை வைப்பவர்களான குறைஷிகளின் அநீதிக்குள்ளாகி அவர்களின் குடும்பமும் பாதுகாப்பற்றதாக ஆகி விட்டது. அவர் தனது இரு சகோதரர்களான அபூ அஹ்மது, உபைதுல்லாஹ் மற்றும் தனது சகோதரியான ஸைனப் பின் ஜஹ்ஷ், உம்மே ஹபீபா மற்றும் ஹிம்னா பின்த் ஜஹ்ஷ் ஆகியோருடன் இருமுறை அபிஸீனியாவுக்கு இடம் பெயர்ந்து சென்றார்கள். அவரது சகோதரர் உபைதுல்லாஹ் அபிஸீனியா சென்று கிறித்தவராகி விட்டார். கிறித்தவராக இருந்த நிலையிலேயே அவர் இறந்து விட்டார். அவரது மனைவியும் அபூ சுஃப்யானின் மகளுமான உம்மே ஹபீபா அபிஸீனியாவிலேயே இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை திருமணம் செய்தார்கள்.

(அஸதல் காபா தொகுதி 3 பக்கம் 89 அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ், 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் மதீனாவுக்கு இடம் பெயரும் முன்பே மக்கா வந்தார். அவரது கோத்திரம் முழுவதும் அதாவது பனூ கனன் தூதானின் எல்லா மக்களுடன் இஸ்லாத்தில் இணைந்திருந்தார்கள். அவர்களுடன் மதீனாவுக்கு சென்றார். இவ்வாறு அவர் தனது உறவினர்களான கோத்திரத்தாருடன் மக்காவை விட்டு காலியாகிச் சென்று விட்டார். அந்த முஹல்லா பொலிவற்றதாக ஆகி விட்டது. பல வீடுகள் அடைபட்டுக் கிடந்தன.

(அத்தப்காதுல் குப்ரா லா பின் ஸஅத் தொகுதி 3 பக்கம் 49. 1996 பைரூத்திலுள்ள தாருல் ஹயா அத்தராஸுல் அரபியில் அச்சிடப்பட்டது)

இதே நிலைதான் இன்று பாகிஸ்தானில் சில இடங்களில் அஹ்மதிகளின் நிலையாக உள்ளது. சில கிராமங்களில் எந்த அஹ்மதியும் இல்லை. அங்கிருந்த அஹ்மதிகள் காலியாகி சென்று விட்டனர். இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்: பனு ஜஹ்ஷ் பின் ரிஆப் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்தபோது அபூ ஸுஃப்யான் பின் ஹர்ப் அவரது வீட்டை அமர் பின் அல்கமாவிடம் விற்று விட்டார். இந்த செய்தி மதீனாவிலிருந்த அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்களுக்கு வந்த போது அவர் இதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அது பற்றி கூறினார்கள்.

உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அப்துல்லாஹ்வே! இதற்கு பகரமாக அல்லாஹ் உமக்கு சுவர்க்கத்தில் ஒரு மாளிகையை தருவதில் உமக்கு திருப்தியில்லையா? என்று கூறினார்கள். அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ், ஏனில்லை? என்றார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அந்த மாளிகை உமக்குரியதாகும் என்று கூறினார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 352, பாடம்: ஹிஜ்ரதுர் ரஸூல் (ஸல்). 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அதாவது எந்த இடங்களை நீர் விட்டு விட்டு வந்தீரோ அதற்குப் பகரமாக சுவர்க்கத்தில் உமக்கு இடம் கிடைக்கும். அங்கு உங்களுக்கு மாளிகை ஆயத்தம் செய்யப்பட்டிருக்கும் என்று அன்னார் கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நஹ்ஸாவின் பள்ளத்தாக்கிற்கு அனுப்பினார்கள். இதுபற்றி நூல்களில் இவ்வாறு வருகிறது.

ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஷா தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷிடம் கூறினார்கள்: நீங்கள் காலையில் உம்முடைய ஆயுதங்களை தரித்துக் கொண்டு வருக. நான் உம்மை ஓரிடத்திற்கு அனுப்பப் போகிறேன். இந்த வகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சுபுஹ் தொழுது முடிந்ததும் தமது வீட்டின் கதவுக்கு அருகில் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்கள் வில், அம்பு மற்றும் கேடயத்துடன் அன்னாரை எதிர்பார்த்து நின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உபை பின் கஅபை அழைத்து ஒரு கடிதம் எழுதுமாறு கூறினார்கள். கடிதம் எழுதப்பட்டதும் அதனை வாங்கி அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷிடம் கொடுத்து, நான் உம்முடைய தலைமையில் உம்மை கண்காணிப்பவராக நியமித்து ஒரு கூட்டத்தினரிடம் உம்மை அனுப்புகிறேன்.

வரலாற்றில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் இப்படைக்கு தலைவராக உபைதா பின் ஹாரிஸை நியமித்திருந்தார்கள். புறப்படும் முன் அவர் விடை பெறுவதற்காக வீட்டிற்குச் சென்றபோது அவரது பிள்ளைகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அழுதனர். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷை அமீர் ஆக்கி அவ்விடத்திற்கு அனுப்பினார்கள். அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷை அனுப்பும்போது அவருக்கு அமீருல் முஃமினீன் என்ற பட்டத்தை சூட்டினார்கள்.

சீராத்துல் ஹல்பிய்யாவில் இது குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு அப்துல்லாஹ் ஜஹ்ஷ் அவர்கள்தான் இஸ்லாமிய வரலாற்றில் அமீருல் முஃமினீன் என்ற பட்டப் பெயர் சூட்டப்பட்ட முதல் மனிதர் ஆவார்கள்.

(சீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 217. 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் [illegible] என்ற வசனத்திற்கு (2:218) விரிவுரை எழுதும்போது இந்த சம்பத்தை பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் மக்கா முகரமாவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனா சென்ற பின்னரும் கூட மக்காவாசிகளின் கோபம் குறையவில்லை. மதீனாவாசிகளுக்கு மிரட்டல் வந்து கொண்டே இருந்தன. நீங்கள் எங்கள் மக்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளீர்கள். உங்களுக்கு இனி ஒரே ஒரு வழிதான் உள்ளது.

ஒன்று, அவர்கள் அனைவரையும் நீங்கள் கொலை செய்து விட வேண்டும். அல்லது மதீனாவை விட்டும் வெளியேற்ற வேண்டும். இல்லையெனில் நாங்கள் சத்தியம் செய்து கூறுகிறோம். நாங்கள் மதீனா மீது தாக்குதல் தொடுப்போம். உங்கள் எல்லாரையும் கொன்று விட்டு உங்கள் பெண்களைக் கைப்பற்றிக் கொள்வோம் என்றனர். வெறும் மிரட்டல் மட்டும் விடவில்லை. மாறாக மதீனா மீது தாக்குதல் தொடுக்க அவர்கள் ஆயத்தமாயினர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நிலை அந்த நாட்களில் எவ்வாறு இருந்தது எனில், அவர்கள் பல இரவுகள் விழித்துக் கொண்டு இருந்தார்கள். அதேபோன்று சஹாபாக்கள் இரவில் ஆயுதம் ஏந்தியவாறு உறங்கினர். இரவின் இருட்டில் எதிரிகள் திடீரென்று தாக்குதல் தொடுத்து விடக்கூடாதே என்பதற்காக அவர்கள் அவ்வாறு செய்தனர். இந்நிலையில் அதுபோன்ற சூழ்நிலை வந்தால் முஸ்லிம்களுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பக்கம் மதீனாவிற்கு அக்கம் பக்கத்தில் வாழ்ப்பவர்களுடன் உடன்படிக்கை செய்தார்கள்.

மறுபுறம் இந்த செய்திகளின் காரணத்தால் அதாவது குறைஷிகள் தாக்குதலுக்கு தயாராகின்றனர் என்பதால் அன்னார் ஹிஜிரி 2 –ல் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷிடம் ஒரு கடிதம் கொடுத்து நஹ்லாவுக்கு அனுப்பினார்கள். அக்கடிதத்தை இரண்டு நாட்கள் கழித்துதான் திறக்க வேண்டும் என்று கூறியிருந்தார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் இரண்டு நாட்கள் கழித்து திறந்து பார்த்தபோது அதில் இவ்வாறு எழுதி இருந்தது. அதாவது நீங்கள் நஹ்லாவில் தங்குங்கள். குறைஷிகளின் நிலவரங்கள் குறித்து எனக்கு தகவல் கொடுங்கள் என்று எழுதப்பட்டிருந்து.

தற்செயலாக அவர்கள் அங்கு சென்றபோது குறைஷிகளின் ஒரு சிறிய குழு சிரியாவிலிருந்து வியாபாரப் பொருட்களை எடுத்துக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தது. அவர்கள் அவ்வழியாக கடந்து சென்றனர். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் தங்களது சொந்த அனுமானத்தின் பேரில் தானே முடிவு செய்தவாறு அவர்களை தாக்கினார்கள். இதன் விளைவாக நிராகரிப்பவர்களில் ஒருவரான அமர் பின் அல்ஹஸ்ரமி கொல்லப்பட்டார்.

மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். மேலும் போரில் கிடைத்த பொருள்களையும் முஸ்லிம்கள் கைப்பற்றினர். அவர்கள் மதீனா வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறியபோது அன்னார் மிகவும் கோபம் கொண்டார்கள். உம்மை சண்டையிட அனுமதி தரவில்லையே? என்று கூறியவாறு போரில் கிடைத்த செல்வங்களையும் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள்.

இப்னு ஜரீர் ஹஸ்ரத் அப்பாஸிடமிருந்து அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் மற்றும் அவர்களது தோழர்களிடம் இந்த தவறு ஏற்பட்டு விட்டது. அவர்கள் தவறுதலாக அப்போது ரஜப் மாதம் தொடங்கவில்லை என்று கருதி விட்டனர். ஆனால் அப்போது ரஜப் மாதம் தொடங்கி இருந்தது. அவர்கள் அது ஜமாஅதிஸ் சானியின் 30 –வது நாள் என்று கருதியிருந்தார்கள். ரஜப் தொடங்கவில்லை என்று நினைத்து இருந்தார்கள்.

எவ்வாறிருப்பினும் அமர் பின் அல் ஹஜ்ரமி ஒரு முஸ்லிமின் கையால் கொல்லப்பட்டதால் இணைவைப்பவர்கள் கூச்சலிட்டனர். இப்போது முஸ்லிம்களுக்கு புனித மாதங்களின் கண்ணியம் பற்றியும் கவலை இல்லை போலும். அந்த மாதங்களில் எல்லா யுத்தங்களும் நிறுத்தி வைக்கப்படுமே என்று கூச்சலிட்டனர்.

ஹஸ்ரத் முஸ்லிம் மவ்வூது (ரலி) கூறுகிறார்கள்:

இந்த வசனத்தில் இந்த ஆட்சேபனையைக் குறிப்பிட்டவாறு கூறப்பட்டுள்ளது. அந்த மாதத்தில் சண்டையிடுவது நிச்சயமாக விரும்பத்தகாத செயல்தான். அல்லாஹ்வின் பார்வையில் பாவமும் ஆகும். ஆனால் அதை விட விரும்பத்தகாத விஷயம் என்னவெனில், அல்லாஹ்வின் வழியில் இருந்து மக்களை தடுப்பது, அல்லாஹ்வின் ஏகத்துவத்தை மறுப்பது, மஸ்ஜிதே ஹராமின் புனிதத்துவத்தை பொய்யாக்குவது, அதில் வாழ்பவர்களை ஒரே இறைவனை ஏற்றுக் கொண்டதற்காக வீட்டிலிருந்து வெளியேற்றுவது ஆகியவை ஆகும்.

உங்களுக்கு ஒரு விஷயம் மட்டும் நினைவுக்கு வந்து விட்டது. ஆனால் நீங்கள் எவ்வளவு பெரிய குற்றத்தை செய்கிறீர்கள் என்று யோசிக்கவில்லை. அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலை மறுத்து விட்டு மஸ்ஜிதே ஹராமின் புனிதத்துவத்தை பாழாக்கி அங்கு வாழ்ப்பவர்களை அதிலிருந்து வெளியேற்றி எவ்வளவு வெறுக்கத்தக்க வேலையைச் செய்துள்ளீர்கள். நீங்கள் சுயம் இதுபோன்ற மோசமான செயல்களைச் செய்து விட்டு முஸ்லிம்களை எந்த முகத்துடன் ஆட்சேபனை செய்வீர்கள்? அவர்களிடமிருந்து தவறுதலாக ஒரு தவறு நடந்துள்ளது. ஆனால், நீங்கள் தெரிந்து கொண்டே தவறு செய்கிறீர்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 474,475)

புகாரியில் ஒரு ஹதீஸை விரிவுரை செய்தவாறு ஹஸ்ரத் செய்யது ஜைனுல் ஆபிதின் ஷா சாஹிப் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் உடைய செயலின் விளைவுகளைப் பற்றி கூறுகிறார்.

சம்பவத்திலிருந்து தெரிய வருவதாவது, எந்த நோக்கத்துக்கு அந்த குழு அனுப்பப்பட்டதோ அதில் அவர்களுக்கு முழுமையான வெற்றி கிடைத்தது. அவர்கள் கைதிகள் மூலமாக மக்கத்து குறைஷிகளின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளைக் குறித்து உறுதியான தகவல்களைப் பெற்று விட்டார்கள்.

ஹஜ்ரமி கோத்திரத்தினருடன் நடந்த சம்பவமானது தற்செயலாக நடந்த நிகழ்வு ஒரு நிகழ்வாகும். சில வரலாற்று ஆய்வாளர்கள், இந்த கூட்டத்தின் அசல் நோக்கம், இந்த குழுவில் பங்கு பெற்ற சிலர் கைப்பற்றப்பட்டிருந்த முஹாஜிர்களின் சொத்தை தேடுவதுதான் என்று கூறுகிறார்கள். ஆனால் இது தவறாகும். மாறாக, இந்த குழுவின் அசல் நோக்கம் இதுவாகும். அதாவது

அபூ ஸுஃப்யான் பின் ஹரப் தலைமையில் செல்லும் கூட்டத்தின் அசல் நோக்கம் மற்றும் மக்காவாசிகளின் திட்டம் என்ன என்று அறிவதாகவே இருந்தது. அந்த நோக்கம் நிறைவேறியது. மக்கத்து குறைஷியின் நோக்கம் மற்றும் அவர்களின் யுத்த ஏற்பாடுகளை பற்றி அறிவதுதான் அவர்களின் நோக்கமாக இருந்தது. மேலும் இப்பணியே மிகவும் இரசியமாக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்து. அந்த சின்னஞ்சிறு கூட்டத்தை தமது பிடியில் கொண்டு வர வேண்டும் என்பது அவர்களது எண்ணமாக இருக்கவில்லை. ஆனால், அவர்கள் கோத்திரத்தின் பொருட்களை கொள்ளையடிப்பதை விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் திரும்பிச் செல்வதையே போதுமானதாகக் கருதினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் மிகவும் உயர் மதிப்பு பெற்ற சஹாபி ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பெரியம்மா மகனும் ஆவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய இரகசியங்களை பாதுகாக்கின்ற மனிதரைத்தான் அப்பணிக்காக தேர்ந்தெடுத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மக்கத்து குறைஷிகளின் போருக்காக ஆயத்தமாவது குறித்து தகவல் கிடைத்ததும் அன்னார் தமது ஆயத்தங்களை தொடங்கினார்கள். அந்த ஆயத்தங்களை அவர்கள் மிகவும் இரகசியமாக செய்தார்கள்.

(சஹீஹ் புகாரி தொகுதி 8 பக்கம் 15, மொழியாக்கம்: ஹஸ்ரத் செய்து ஜைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷா சாஹிப், ரப்வாவிலுள்ள ஜியாவுல் இஸ்லாம் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

யுத்தங்கள் சம்பந்தமான அறிவிப்புகளில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் மற்றும் அவருடன் இருந்தவர்கள் மீது கோபம் காட்டினார்கள். அதற்கு காரணம் இதுபோன்ற நிலையில் இவ்வாறு செய்வது குழப்பத்திற்கு காரணமாக அமைந்து விடும் என்பதால் அவ்வாறு செய்தார்கள். சில செயல்கள் வெளிப்படையில் தவறானதாக இருப்பினும் அது இறை விருப்பத்தின் அடிப்படையிலேயே நடக்கின்றது. சில சாதாரண சம்பவங்கள் மகத்தான விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றது.

அதுபோன்று அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷின் அக்கூட்டம் அனுப்பப்படாதிருந்தால், அவர்கள் மூலம் ஏற்பட்ட விஷயங்கள் நடைபெறாமல் இருந்தால், அபூ சுஃப்யானின் தலைமையில் சிரியாவில் இருந்து வந்த வாணிபக் குழு மக்காவில் எவ்வித அச்சமுமின்றி நுழைந்து விட்டால் குறைஷியர்கள் இக்குழுவினர் மூலமாக முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடங்கி இருப்பர்.

அவர்களை எதிர்கொள்வது என்பது மிகக் குறைந்த எண்ணிக்கையும் ஆயுத பலமும் இல்லாத சஹாபாக்களுக்கு எணணிப் பார்க்க முடியாத நிலையாக இருந்தது. ஆனால் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷின் சம்பவத்தால் ஆணவம் கொண்ட குறைஷி தலைவர்கள் கோபத்தில் கொத்தளித்திருப்பார்கள். அவர் உடனேயே தமது குழுவைச் சேர்ந்தவர்களை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக ஆயிரம் பேரைக் கொண்ட ஒரு கூட்டத்துடன் ஆயுதம் ஏந்தி பயிற்சி பெற்ற போர் படையுடன் பத்ர் மைதானத்தை வந்தடைந்தனர். ஆனால் அங்குதான் அவர்களின் மரணம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது என்பதை அவர்கள் அறியவில்லை.

இன்னொரு புறம் கண்ணியத்திற்குரிய சஹாபாக்களுக்கு ஆயுதம் தரித்த ஒரு படையை எதிர்கொள்ள வேண்டியது வரும் என்று தெரிந்திருந்தால் அவர்களில் சிலர் தயங்கி இருப்பர். எனவே இரகசியத்தை பேணக் கூடியவர்கள எத்தகைய பணியை செய்தார் என்றால் அந்த பணி போரில் பின்பற்றக்கூடியதாகவே இருந்தது. தற்போது அதனை யுத்த நடைமுறைக்கான சொற்களில் உருமாற்றம் என்று சொல்லப்படுகிறது.

(சஹீஹ் புகாரி தொகுதி 8 பக்கம் 17, மொழியாக்கம்: ஹஸ்ரத் செய்து ஜைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷா சாஹிப், ரப்வாவிலுள்ள ஜியாவுல் இஸ்லாம் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது: அல்லாஹ் மற்றும் ரஸூலின் மீது கொண்ட நேசம் அவர்களை உலகை விட்டு தன்னிறைவு பெற்றவர்கள் ஆக்கி விட்டது. அவர்களுக்கு எதாவது நோக்கம் இருக்கும் எனில் அது தனது பிரியமான உயிரை இறை வழியில் அர்ப்பணித்து இறை திருப்தியை தேடுவதாகவே இருந்தது. இந்த வகையில் அவர்களின் ஆசை நிறைவேறியது. المجدع في الله அதாவது அல்லாஹ்வின் வழியில் காதுகளை வெட்டப்பட்டவர்கள் என்ற சொல்லுக்கு உரியவர்கள் ஆனார்கள். இது அவர்களை பற்றிய தனிச் சிறப்பு மிக்க அடையாளமாக இருந்தது.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 90. 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷின் துஆ எவ்வாறு நிறைவேறியது என்பது பற்றி வருகிறது. அன்னாரது ஷஹாதத்திற்கு முன் அவர்களின் ஒரு துஆ பிரபல்யமாக உள்ளது. இஷ்ஹாக் பின் ஸஅது பின் அபீ வகாஸ் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் எனது தந்தையாகிய ஸஅதிடம் உஹது போர் நடைபெற்ற நாளில் கூறினார்கள்.

அல்லாஹ்விடம் துஆ செய்வோம் வாருங்கள். பிறகு இருவரும் ஒருபுறம் சென்றார்கள். முதிலின் சஅத் அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! நாளை நான் எதிரிகளை சந்திக்கும்போது கடுமையாக தாக்குபவரை சந்திக்க வேண்டும். அவர்கள் பற்றிய ஒரு திகில் மிகைத்து இருக்க வேண்டும். அத்தகையவருடன் நான் சண்டையிட வேண்டும். உனது வழியில் அவரை கொன்று அவரது ஆயுதங்களை கைப்பற்ற வேண்டும். இதற்கு அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் ஆமீன் கூறினார்.

அதன் பிறகு அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் துஆ செய்தார். அல்லாஹ்வே! நாளை என் முன் வரக்கூடியவர் கடுமையான தாக்குதல் தொடுப்பவராக இருக்க வேண்டும். அவரது திகில் அதிகமாக இருக்க வேண்டும். அத்தகையவரை நான் உனக்காக கொல்ல வேண்டும். அல்லது அவர் மிகைத்து என்னைக் கொன்று எனது மூக்கு காது ஆகியவற்றை அறுக்க வேண்டும். இந்நிலையில் நான் உன்னிடம் வர வேண்டும். அந்நிலையில் நீ என்னிடம், அப்துல்லாஹ்வே! எவரது வழியில் உனது மூக்கும் இரு காதுகளும் வெட்டப்பட்டன? என்று கேட்க வேண்டும். அதற்கு நான், உனது மற்றும் உனது ரஸூலின் (ஸல்) வழியில் அறுக்கப்பட்டன என்று கூற வேண்டும். அதற்கு பதிலாக இறைவா! நீ உண்மை கூறினாய் என்று கூற வேண்டும்.

ஹஸ்ரத் சஅது கூறுகிறார்: என் துஆவை விட அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் உடைய துஆ சிறந்ததாக இருந்தது. எனவே நான் கடைசி நாளில் அவரது மூக்கு காதுகளை பார்த்தேன். அவை வெட்டப்பட்டிருந்தன. அவை சேதப்படுத்தப்பட்டிருந்தன.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 90. 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

இது மிகவும் அநீதியான செயல் ஆகும். காஃபிர்கள் இவ்வாறு செய்து வந்தனர். இதனையே இன்று சில தீவிரவாதத்தை விரும்பும் முஸ்லிம்கள் இஸ்லாத்தின் பெயரால் செய்கின்றனர்.

ஹஸ்ரத் முத்தலிப் பின் அப்தில்லாஹ் பின் ஹன்தப் உடைய அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹதுக்கு புறப்பட்ட அன்று செல்லும் வழியில் இரவு ஷேன்ஹைன் என்ற இடத்தில் தங்கினார்கள். ஹஸ்ரத் உம்மே ஸல்மா பொரித்த கறியை கொண்டு வந்தார்கள். அதனை அன்னார் உண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நபீஸ் என்ற ஒரு பானத்தையும் கொண்டு வந்தார்கள். அதனையும் அவர்கள் பருகினார்கள். அவை ரவை கஞ்சி போன்ற ஒன்றாகும் என்று நான் நினைக்கின்றேன்.

பிறகு ஒருவர் அந்த பாத்திரத்தை எடுத்து சிறிது அருந்தினார். பிறகு அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்கள் அதை எடுத்து அருந்தினார்கள். அன்னார் அதை முழுவதும் குடித்து முடித்து விட்டார்கள். ஒருவர் அதனை எனக்கும் தாருங்கள் என்றார். நாளை காலை நீங்கள் எங்கே போகப் போகிறீர்கள் என்று தெரியுமா? என்று அவர் கேட்டார். அதற்கு அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ், எனக்கு தெரியும். நான் அல்லாஹ்வை நன்கு குடித்து உண்ட நிலையில் சந்திக்க விரும்புகிறேன். ஆனால் நான் இதை விட அதிக தாகமுடம் இருக்கின்ற நிலையில் அவனை சந்திப்பது எனது விருப்பமாக இருக்கின்றது.

(அத்தப்காதுல் குப்ரா தொகுதி 3 பக்கம் 50, 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஹயா அத்தராஸுல் அரபி அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

சஹாபாக்களின் இறை நேசம் மிகவும் வியக்கத்தக்கதாக இருந்தது. மேலும் அதற்காக அவர்கள் ஆயத்தம் ஆன விதமும் கூட வியக்கத்தக்கதாகவே இருக்கிறது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் இருவரும் ஒரே கபரில் அடக்கம் செய்யப்பட்டனர். ஹஸ்ரத் ஹம்ஸா ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் உடைய மாமா ஆவார். ஷஹாதத்தின்போது அவரது வயது 40 –ஐ விட சற்று அதிகமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்கள் விட்டுச் சென்ற பொருள்களுக்கு பாதுகாவலராக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது மகனுக்கு கைபரில் பொருள் வாங்கிக் கொடுத்தார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துல் சஹாபிய்யா தொகுதி 3 பக்கம் 90. 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் மிகவும் சிறந்த ஆலோசனை கூறுபவராக இருக்கின்ற சிறப்பும் பெற்றிருந்தார். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் பத்ர் பற்றி எந்தெந்த சஹாபாக்களிடம் எல்லாம் ஆலோசனை கேட்டார்களோ அவர்களில் அன்னாரும் ஒருவராவார்கள்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூகத்துல் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 16, 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போர்க்களத்திலிருந்து திரும்பிய சம்பவத்தைக் கூறும்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் உடைய சகோதரியின் சம்பவத்தை கூறுகிறார்கள். வரலாற்றில் இவ்வாறு வருகிறது. அல்லது அன்னார் தனது சொற்களில் இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்கள்.

உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு தனது உயர்ந்த நல்லொழுக்கத்தையும் விவேகத்தையும் காட்டினார்கள். மக்களிடம் எவ்வாறு கனிவும் அனுதாபமும் காட்டினார்கள். இந்த போரிலிருந்து அன்னார் நல்லொழுக்கத்தின் எத்தகு உயர்வான படித்தரத்தில் இருக்கின்றார்கள் என்பதும் அந்த யுத்தத்தின் மூலம் சஹாபாக்களின் மகத்தான தியாகமும் நமக்கு தெரிய வருகிறது.

எழுதுகின்றார்கள்: அன்னார் போர் முடிந்து மதீனா திரும்பி வருகை தந்து கொண்டிருந்த அந்த நேரத்தை குறித்து நான் கூறுகிறேன். மதீனாவின் பெண்கள் அன்னாரின் ஷஹாதத் செய்தியைக் கேட்டு துடித்துப் போயிருந்தார்கள். அன்னார் வருகிறார்கள் என்று தெரிந்ததும் வரவேற்பதற்காக மதீனாவுக்கு சற்று வெளியில் வந்திருந்தார்கள். அதில் அன்னாரது மைத்துனி ஜஹ்ஷ் அவர்களின் மகளான ஹிம்னா அவர்களும் இருந்தார்கள். அவர்களின் மூன்று நெருங்கிய உறவினர்கள் அந்தப் போரில் இறந்திருந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களைப் பார்த்ததும் கூறினார்கள்: உங்களுடைய உறவினர்களை மரணத்திற்காக வருத்தப்படுங்கள். இது அரபி மொழியில் ஒரு

சொல் வழக்காகும். உனது அன்பிற்குரியவர் ஒருவர் கொல்லப்பட்டு விட்டார் என்ற செய்தியை நான் உனக்கு தெரிவிக்கிறேன் என்பது அதன் பொருளாகும். ஜஹ்ஷ் அவர்களின் மகளான ஹிம்னா அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எந்த மரணித்தவருக்காக நான் வருத்தப்பட வேண்டும் என்று கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உமது மாமா ஹஸ்ரத் ஹம்ஸா ஷஹீதாகி விட்டார் என்று கூறினார்கள். இதனைக் கேட்டு ஹஸ்ரத் ஹிம்னா, إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ கூறினார். மேலும் அல்லாஹ் அவர்களது அந்தஸ்த்தை உயர்த்துவானாக. அவர் எத்தகைய சிறந்த மரணத்தை அடைந்துள்ளார்கள் என்று கூறினார்கள்.

உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்னோர் உறவினரின் மரணத்திற்கு வருத்தப்படுங்கள் என்று கூறினார்கள். அதற்கு, யாருக்காக அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்று ஹிம்னா அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உமது சகோதரர் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் மரணித்து விட்டார் என்றார்கள். ஹிம்னா, إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ என்று கூறினார்கள். அல்ஹம்துலில்லாஹ். மிகவும் நல்ல மரணத்தைப் பெற்றுள்ளார் என்று கூறினார்கள்.

பிறகு அன்னார், ஹிம்னாவே! இன்னொரு மரணித்தவருக்காக நீங்கள் வருத்தப்படுங்கள் என்று கூறினார்கள். யாருக்காக அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்று ஸைனப் கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமது கணவரும் ஷஹீதாகி விட்டார் என்று கூறினார்கள்.

இதனைக் கேட்ட ஹிம்னாவின் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. கைசேதமே! என்றார். இதனைப் பார்த்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பாருங்கள்! பெண்களுக்கு தமது கணவருடன் எத்தகைய தொடர்பு இருக்கிறது? நான் ஹிம்னாவிடம் அவரது மாமாவின் மரணத்தை பற்றி கூறும் போது அவர்கள், إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ என்று கூறினார்கள். அவரது சகோதரரின் மரணம் பற்றி கூறினேன். அப்போதும் إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ கூறினார்கள்.

ஆனால் நான் அவரது கணவரது மரணம் பற்றிய செய்தியை கூறியவுடன் அவர் பெருமூச்சு விட்டவாறு கைசேதமே! என்று கூறினார். மேலும் அவரது கண்ணீரை அவரால் அடக்க முடியவில்லை; பதற்றமடைந்தார். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அதுபோன்ற சந்தர்ப்பங்களில் பெண்களுக்கு தமது விருப்பத்திற்குரிய உறவினர்கள், இரத்த உறவுகள் மறந்து போகின்றன. ஆனால், தன் மீது அன்பு செலுத்தும் கணவர் நினைவில் இருக்கின்றார் என்று கூறினார்கள்.

பிறகு அன்னார் ஹிம்னாவிடம், உமது கணவரின் மரணத்தின் செய்தியை கூறியபோது கைசேதமே! என்று ஏன் கூறினாய்? என்று கேட்டார்கள். அதற்கு ஹிம்னா, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு அவரது மகன் நினைவில் வந்தான். அவனை யார் கவனிப்பார்? என்று கேட்டார்.

ஓர் அன்பு செலுத்துகின்ற கணவர் இருப்பாரேயானால் மனைவி அவரை நினைவு கூருகின்றாள். ஆனால் அவரது குழந்தை மீதுகவலை இருந்தது. அதை அவர் வெளிப்படுத்தினார். இதில் தற்கால ஆண்களுக்கும் பாடம் உள்ளது. பெண்களுக்கும் பாடம் உள்ளது. ஆண்கள் அன்பு செலுத்தும் கணவராகவும் இருக்க வேண்டும். பெண்கள் குழந்தைகளைப் பற்றி கவலைப்படும் தாயாகவும் இருக்க வேண்டும். அன்பு செலுத்தும் கணவராக இருப்பதற்கு மனைவி மற்றும் குழந்தைகளின் உரிமைகளை வழங்குவது மிகவும் அவசியமாகும். தற்காலத்தில் அந்த உரிமைகள் வழங்கப்படுவதில்லை என்ற புகார்கள் அதிகமாக வருகின்றன.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வளவு அழகாக கூறினார்கள். அன்னார் ஹிம்னாவிடம், நான் உமக்காக துஆ செய்கிறேன். அல்லாஹ் உமது கணவரை விட உமது குழந்தைகளின் மீது அதிக கவனம் செலுத்தக்கூடிய ஒருவரை உமக்கு தருவானாக. அதாவது குழந்தைகளை நன்றாக பார்த்துக் கொள்ளக்கூடியவ மிகச்சிறந்த ஒருவரை வழங்குவானாக. பிறகு இந்த துஆவின் விளைவாக ஹஸ்ரத் ஹிம்னா (ரலி) அவர்களுடைய திருமணம் தல்ஹா (ரலி) அவர்களுடன் நடந்தது. அவர்களுக்கு முஹம்மது பின் தல்ஹா என்ற மகன் பிறந்தான்.

வரலாற்றில் தெரிய வருகிறது. ஹஸ்ரத் தல்ஹா தனது மகன் முஹம்மது மீது எத்தகைய அன்புடனும் பரிவுடனும் நடந்து கொண்டார்களோ அவ்வாறான அன்பையும், பரிவையும் ஹிம்னா தனது குழந்தைகளின் மீது இதற்கு முன்பு காட்டியதில்லை. இன்னொருத்தரின் குழந்தையை இவ்வளவு நல்ல முறையில் பராமரிப்பவர் தல்ஹாவை விட வேறு எவரும் இருக்க முடியாது என்று மக்கள் கூறி வந்தனர். இது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுயை துஆவின் விளைவாகும்.

(மஸாயிப் கே நீசே பர்கதூன் கான ஹஸானே மஹஃபி ஹோதே ஹேன், அன்வாருல் உலூம் தொகுதி 19 பக்கம் 56,57)

இரண்டாவது ஸஹாபி **கஅப் பின் ஸைத்** அவர்களுடையதாகும். அவரது பெயர் கஅப் பின் ஸைத் பின் கைஸ் பின் மாலிக் ஆகும். இவர் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவர். ஹஸ்ரத் கஅப் பத்ர் போரில் கலந்து கொண்டிருந்தார்கள். அகழ் போரில் ஷஹீதாக்கப்பட்டார்கள். அன்னார் மீது உமைய்யா பின் ரபியா பின் ஸகர் உடைய அம்பு பாய்ந்தது என்று கூறப்படுகின்றது. அவர்கள் பஅரே மவூனா என்ற இடத்திற்குச் சென்ற ஸஹாபாக்களில் ஒருவராவார்கள். அங்கு அன்னாரைத் தவிர ஏனைய அனைவரும் ஷஹீதாக்கப்பட்டார்கள். அன்னார் மட்டுமே உயிருடன் தப்பினார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 376, 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பஅரே மவூனாவானது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு கோத்திரத்தாரின் வேண்டுகோளை ஏற்று 70 ஸஹாபாக்களை அனுப்பி வைத்த இடமாகும். அதில் அதிகமானோர் திருக்குர்ஆனை மனனம் செய்தவர்களும் காரிகளும் இருந்தனர். அன்னாரையும், ஹஸ்ரத் கஅப் (ரலி) அவர்கள் தவிர மற்ற அனைத்து ஸஹாபாக்களையும் இந்த மக்கள் ஏமாற்றி ஷஹீதாக்கினார்கள்.

அன்னார் மட்டும் உயிரோடு தப்பிக்க காரணம் அவர்கள் ஒரு மலையின் மீது ஏறி விட்டார்கள். சில அறிவிப்புகளின்படி காஃபிர்கள் தாக்குதல் தொடுத்து அவரையும் கூட கடும் காயத்திற்கு உள்ளாக்கினர். காஃபிர்கள் அவர் இறந்து போனதாக கருதி விட்டுச் சென்று விட்டனர். ஆனால் அப்போது அவர்களுக்கு உயிர் இருந்தது. அவர்கள் சில நாட்களுக்குப் பிறகு மதீனா வந்தடைந்தார்கள். பிறகு அவர்களுக்கு வாழ்க்கை கிடைத்தது. மேலும் அவர்களது உடல் நிலை சரியாகி விட்டது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் சாஹிப் (ரலி) M.A அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 518,519)

மூன்றாவது ***சாலிஹ் ஷுக்ரான்*** என்ற ஸஹாபி. இவர்களது பெயர் சாலிஹ் என்பதாகும். ஷுக்ரான் என்பது பட்டப் பெயர். இந்த பெயரியாலேயே அவர் பிரபல்யமாக இருந்தார். சாலிஹ் ஷுக்ரான் அவர்கள் அப்துல்லாஹ் பின் அவ்ஃப் உடைய விடுதலை செய்யப்பட்ட அடிமை ஆவார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவரை தமக்கு தொண்டு செய்வதற்காக விரும்பி வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மானிடம் விலை கொடுத்து வாங்கினார்கள். சில அறிவிப்புகளின்படி அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் எந்த விலையையும் பெறாமலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு காணிக்கையாக அவரை வழங்கி விட்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 392 ஷூக்ரான் (ரலி). 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சாலிஹ் ஷுக்ரான் பத்ர் போரில் கலந்து கொண்டார். இவர் அப்போது அடிமையாக இருந்தார். விடுதலை பெறவில்லை. அதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்குரிய பங்கு நிர்ணயிக்கவில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சாலிஹ் ஷுக்ரானை கைதிகளை கண்காணிப்பவராக நியமித்தார்கள். சாலிஹ் ஷுக்ரான் எந்த கைதிகளை கண்காணித்து வந்தார்கள். அதற்குப் பதிலாக அவர்களுக்கு அதற்குரிய கூலியை கொடுத்து வந்தார்கள். இதனால் போர் செல்வத்தை விட அதிகமான பொருள்கள் அவர்களுக்கு கிடைத்தன. பத்ர் போருக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை விடுதலை செய்து விட்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 384 ஷூக்ரான் (ரலி). 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஜாபிர் பின் முஹம்மது ஸாதிக் கூறுகிறார்: ஹஸ்ரத் ஷுக்ரான் திண்ணைத் தோழர்களைச் சார்ந்தவராக இருந்தார்கள்.

(ஹல்யத்துல் அவ்லியா தொகுதி 1 பக்கம் 348)

திண்ணைத் தோழர் எப்போதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் ஸுக்ரானுக்கு அந்த வாய்ப்பு கிடைத்திருந்தது. அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வஃபாத்தின்போது அவர்களை குளிப்பாட்டவும், அடக்கவும் செய்யும் வாய்ப்பு கிடைத்திருந்தது.

(அல்அஸாபா தொகுதி 3 பக்கம் 284. 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அவர்களது சட்டையுடனேயே குளிப்பாட்டப்பட்டனர். அவர்களின் கபரில் ஹஸ்ரத் அலி மற்றும் ஹஸ்ரத் பஹ்ல் பின் அப்பாஸ், ஹஸ்ரத் கஸ்ம் பின் அப்பாஸ், ஹஸ்ரத் ஷுக்ரான், ஹஸ்ரத் அவ்ஃப் பின் ஹவஸி ஆகியோர் இறங்கி நின்றனர்.

(சுனனுல் குப்ரா லில் பேஹக்கி தொகுதி 4 பக்கம் 84 ஹதீஸ் எண் 7143)

ஹஸ்ரத் ஷுக்ரான் இதுபற்றி கூறுகிறார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் கபரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கீழ் பட்டுத் துணியினால் ஆன ஒரு விரிப்பை விரித்தேன். (சுனன் திர்மிதி ஹதீஸ் எண் 1047)

சஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பின்படி அது ஒரு சிவந்த நிற பட்டு விரிப்பாக இருந்தது.

(சஹீஹ் முஸ்லிம் ஹதீஸ் எண் 2241)

அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயன்படுத்தி வந்த விரிப்பாக இருந்தது.

ஹஸ்ரத் ஸுக்ரான் கூறினார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அதனை ஒருவர் போர்த்துவதையும் விரிப்பதையும் நான் விரும்பவில்லை. ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதை போர்த்தினார்கள். விரித்தார்கள்.

(அல் மின்ஹாஜ் பஷரஹ் சஹீஹ் முஸ்லிம் பக்கம் 749 ஹதீஸ் எண் 967. 2002 ஆம் ஆண்டு தார் இப்னு ஹஸமில் அச்சடிக்கப்பட்டது)

பல்வேறு போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஷுக்ரானை கைதிகளுக்கும், ஆயுதங்கள் மற்றும் கால்நடைகளுக்கு அவர்களை கண்காணிப்பாளராக நியமித்தார்கள்.

(அம்தாவுல் அஸ்மா தொகுதி 6 பக்கம் 316. 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அவர்கள் மிகவும் நம்பிக்கைக்குரியவராக இருந்தார்கள். அவர்களைப் பற்றி வருகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷுக்ரானின் மகனாகிய அப்துர் ரஹ்மான் பின் ஷுக்ரானை அபூ மூஸா அஷ்அரியிடம் அனுப்பினார்கள். மேலும் அவருக்கு இவ்வாறு எழுதினார். உம்மிடம் ஒரு சாலிஹான மனிதராகிய சாலிஹ் ஷுக்ரான் அவர்களின் மகனான அப்துர் ரஹ்மான் என்பவரை அனுப்புகிறேன்.

அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையாவார். எனவே இவரது தந்தையாகிய ஷுக்ரானின் அந்தஸ்த்தை கவனத்தில் கொண்டவாறு இவருடன் நடந்து கொள்ளுங்கள்.

(அல் அஸாபா தொகுதி 5 பக்கம் 31. 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இஸ்லாம் இந்த அந்தஸ்தை தான் அடிமைகளுக்கு வழங்கியது. அவர்களுக்கு விடுதலை கிடைத்தது மட்டுமின்றி அவர்களின் மகன்களும் கூட மரியாதையைப் பெற்றனர்.

ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ஷுக்ரான் மதீனாவில் வாழ்ந்து வந்தார். அவரது ஒரு வீடு பஸ்ராவிலும் இருந்தது. அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலத்தில் வஃபாத் ஆனார்கள்.

(அல் அஸாபா தொகுதி 3 பக்கம் 285. 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து, மாலிக் பின் துஹ்ஷும் என்பவரைப் பற்றி குறிப்பிடுகிறேன். இவர்களது தொடர்பு ஹஜ்ரஜ் கோதிரத்திலுள்ள பனூ கனம் பின் அவ்ஃப் குடும்பத்தைச் சார்ந்ததாகும். அவர்களது ஒரு மகளின் பெயர் ஃபரீஹா ஆகும்.

(அத்தப்காதுல் குப்ரா தொகுதி 3 பக்கம் 282. மாலிக் பின் அத் துஹ்ஷம். 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் ஹயா அத்தராஸுல் அர்பியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மாலிக் பின் துஹ்ஷும் உக்பா உடன்படிக்கையில் இவர் கலந்து கொண்டாரா? இல்லையா? என்பதில் மார்க்க அறிஞர்களிடத்தில் கருத்து வேறுபாடு உள்ளது. இப்னு இஸ்ஹாக், மூஸா பின் உக்பா ஆகியோரின் கருத்தின்படி இவர் உக்பா உடன்படிக்கையில் கலந்து கொண்டார் என்பதாகும். எவ்வாறிருப்பினும், ஆலிம்களின் விவாதம் நடந்து கொண்டே தான் இருக்கின்றது. மாலிக் பின் துஹ்ஷும் அவர்கள் பதர், உஹது, அகழ் மற்றும் பின்னர் நடந்த போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு கலந்து கொண்டார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 405,406. 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஸுஹைல் பின் அம்ர் குறைஷிகளில் மிகப்பெரிய கண்ணியத்திற்குரிய தலைவர் ஆவார். அவர் உஹது போரில் இணை வைப்பவர்களின் தரப்பில் இருந்தார். இவரை மாலிக் பின் துஹ்ஷும் கைது செய்தார்கள்.

அறிவிப்பில் வருகிறது. அமர் பின் ஸஅத் தமது தந்தை ஸஅத் பின் அபீ வக்காஸிடம் இருந்து அறிவிக்கிறார்: நான் பத்ர் போரின் நாளில் ஸுஹைல் பின் அம்ர் மீது அம்பு விட்டேன். அதில் அவரது நரம்பு துண்டாகி விட்டது. நான் இரத்தம் சிந்தப்பட்ட அடையாளங்களுக்கு பின்னாலேயே சென்றேன். மாலிக் பின் துக்ஷும் அவரது முன் நெற்றி முடியைப் பிடித்துக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன். இவர் மீது நானே அம்பு எய்தேன். எனவே இவர் எனது கைதி ஆவார் என்று நான் கூறினேன்.

ஆனால் மாலிக் அவர்கள், இவர் எனது கைதியாவார். நான்தான் அவனை பிடித்தேன் என்று கூறினார்கள். பிறகு சுஹைலை பிடித்துக் கொண்டு இருவரும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தனர். அன்னார் ஸுஹைலை இருவரிடமிருந்தும் வாங்கிக் கொண்டார்கள்.

ரவ்ஹா என்ற இடத்தில் ஸுஹைல் மாலிக் பின் துக்ஷம் கையில் இருந்து தப்பித்து விட்டான். ஹஸ்ரத் மாலிக் உரத்த குரலில் அவரை காணவில்லை என்பதை தெரிவித்தார். மேலும் அவனை தேடத் தொடங்கினார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எவரிடம் கிடைத்தாலும் அவரை கொன்று விடுங்கள் என்று கூறினார்கள்.

போர் செய்ய வந்தவர். முஸ்லிம்களுடன் சண்டையிட்டார். கைது செய்யப்பட்டார். பிறகு தப்பித்து விட்டார். அவர் கைதியாக இருந்ததால் அவரால் ஆபத்து ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, அவருக்காக அவ்வாறு கட்டளையிடப்பட்டது.

ஆனால் அவரது உயிர் காப்பாற்றப்பட வேண்டியிருந்தது. ஸுஹைல் பின் அம்ர் வேறு எவரது கையிலும் மாட்டாமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கிடைத்தார். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவரை கொல்லவில்லை. வேறு ஒரு சஹாபியின் கையில் அவர் கிடைத்திருந்தால் அவர் கொல்லப்பட்டிருப்பார். ஆனாடில அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கையில் கிடைத்ததால் அன்னார் அவரை கொல்லவில்லை.

இது அன்னாரது முன்மாதிரியாகும். மேலும் அன்னாரது இந்த முன்மாதிரியானது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது குற்றம் சுமத்துகின்ற அநீதி இழைப்பவர்களுக்கு பதிலாக இருக்கின்றது. அதாவது அன்னார் அநீதி இழைத்தார்கள்; கொலை செய்தார்கள். கொலை செய்யத் தகுந்தவர் அவர்களது பார்வையில் படும்போது அவர் மீது தீர்ப்பு செய்யப்பட்டிருந்தும் அன்னார் கொலை செய்யவில்லை.

ஒரு அறிவிப்பின்படி ஸுஹைல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரு மரத்தின் புதர்களின் அடியில் கிடைத்தார். அப்போது அவரைப் பிடியுங்கள். அவரது கையை கழுத்துடன் சேர்த்து கட்டுங்கள் என்று அன்னார் கட்டளையிட்டார்கள். அதாவது கைது செய்யப்பட்டார்.

(தாரீஹ் தெமஷ்க் லாபின் அஸாகர் தொகுதி 12 பக்கம் 333)

சஹீஹ் புகாரியில் இந்த அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் இத்பான் பின் மாலிக் என்பவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அன்ஸாரி சஹாபி ஆவார். இவர் பத்ரிலும் கலந்து கொண்டார். இவர் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து கூறினார். அல்லாஹ்வின் தூதரே எனது கண் பார்வை பலவீனமாகி விட்டது. நான் எனது சமுதாயத்துக்கு தொழுகை நடத்துகிறேன். மழை வந்தால் அவர்களுக்கும் எனக்கும் நடுவில் இருக்கின்ற இந்த ஓடையில் தண்ணீர் வெள்ளமாக ஓடுகிறது.

மேலும் நான் அவர்களது மஸ்ஜிதுக்கு போய் தொழுகை நடத்த முடியாது. எனவே, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் என் வீட்டுக்கு வந்து தொழ வேண்டும் என்பது எனது

விருப்பமாகும் என்று கூறினார். அவர் கூறுகிறார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இருவரும் ஒரு நாள் காலைப் பொழுது விடியும்போது எனது வீட்டின் முன்பு நின்று அனுமதி கோரினர். நான் அனுமதி கொடுத்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டுக்குள் வந்தார்கள்; உட்காரவில்லை. மாறாக வீட்டுக்குள் எங்கே நான் தொழ வேண்டும் நீங்கள் விரும்புகின்றீர்கள் என்று கேட்டார்கள்.

அவர் கூறுகின்றார். நான் வீட்டின் ஒரு ஓரத்தைக் சுட்டிக் காட்டி அன்னாரிடம் இங்கு தொழ வேண்டும் என்று விரும்புகிறேன் என்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழ நின்றார்கள். அல்லாஹு அக்பர் கூறினார்கள். நாங்களும் பின்னால் நின்றோம். ஸஃப் கூடியதும் அன்னார் இரண்டு ரக்அத் தொழுதார்கள். பிறகு ஸலாம் வாங்கினார்கள்.

அறிவிப்பாளர் கூறினார்: நாங்கள் அன்னாருக்கு ரொட்டியும் கறியும் கொடுப்பதற்காக நிறுத்தினோம். வீட்டிற்கு முஹல்லாவின் வேறு சிலரும் வந்தார்கள். அவர்களில் ஒருவர் மாலிக் பின் துஹ்ஷும் எங்கே? என்று கேட்டார். அதற்கு அவர்களில் ஒருவர், அவர் நயவஞ்சகர். அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் மீது அன்பு கொள்ளவில்லை என்று கூறினார். ஒருவேளை அவர் வராததினால் அவ்வாறு கூறியிருக்கலாம். அவர்கள் அந்த பகுதியில் வசிப்பவராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவ்வாறு கூற வேண்டாம். அவர் لا إله إلا الله ஒப்புக் கொண்டுள்ளதை நீர் பார்க்கவில்லையா? அதில் அல்லாஹ்வின் திருப்தியைத்தான் நாடியுள்ளார் என்று கூறினார்கள். அவர் கூறினார்: அல்லாஹ்வும் அவனது ரஸூலும்தான் சிறந்த முறையில் அறிவர்.

நயவஞ்சகர்களுக்காக அவர்களின் நலனையே விரும்புபவராக அவரை நாங்கள் பார்த்துள்ளோம். (ஒருவேளை அவரது உள்ளத்தின் மென்மையின் காரணத்தால் அவ்வாறு அவர் விரும்பி இருக்கலாம். அதாவது நயவஞ்சகர்களுக்கு தப்லீக் செய்து இஸ்லாத்தில் கொண்டு வந்து விடலாம் என்று நினைத்திருக்கலாம். எனவே, நயவஞ்சகர்கள் மீது வைத்திருந்த அனுதாபத்தின் காரணத்தால் சஹாபாக்களிடம் தவறான எண்ணம் உருவாகி இருக்கலாம்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் لا إله إلا الله என்று கூறக்கூடிய ஒருவர் மீது நிச்சயமாக நெருப்பை ஹராமாக்கி விட்டான். ஆனால் நிபந்தனை என்னவென்றால், அதில் அவர் அல்லாஹ்வின் திருப்தியை நாடுபவராக இருக்க வேண்டும்.

(சஹீஹ் புகாரி கிதாபுஸ் ஸலாத் ஹதீஸ் எண் 425)

ஃபத்வா வழங்குகின்ற பெயர் தாங்கி ஆலிம்களுக்கும் இதே பதில்தான். குறிப்பாக அவர்கள் அஹ்மதிகளின் மீது இந்த அடிப்படையில் அநீதி இழைக்கின்றனர். இந்த பெயர் தாங்கி ஆலிம்களின் ஃபத்வாக்களினால்தான் முஸ்லிம் நாடுகளில் நிம்மதியற்று இருகின்றன.

பாகிஸ்தானில் لبيك يا رسول الله என்ற ஓர் அமைப்பு இருக்கின்றது அவர்கள் لبيك يا رسول الله என்று கோஷமிடத்தான் செய்கின்றனர். ஆனால் لبيك يا رسول الله என்பது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலான لا إله إلا الله என்று கூறியவரை முஸ்லிம்கள் இல்லை என்று கூறாதீர்கள் அல்லாஹ்வின் திருப்தியை நாடியவாறு அவர்கள் இவ்வாறு கூறினால் அல்லாஹ் அவர்கள் மீது நெருப்பை ஹராமாக்கி விட்டான் என்பதாகும். ஆனால் இவர்கள் நம்மை அல்லாஹ்வின் விருப்பத்தை நாம் நாடவில்லை என்று கூறுகின்றனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விட இவர்கள் மக்களின் உள்ளங்களை அறிந்தவர்களாக இருக்கிறார்கள் போலும். அல்லாஹ் இவர்களை விட்டு சமுதாயத்தைப் பாதுகாத்து வைப்பானாக.

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் இத்பான் மின் மாலிக் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், ஹஸ்ரத் மாலிக் பின் துஹ்ஷும் நயவஞ்சகர் ஆவார் என்று கூறினார்கள்.

அதற்கு பெருமானர் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் மாலிக் பின் துக்ஷும் லாயிலாஹ இல்லல்லாஹ்வை சாட்சி சொல்லவில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு இத்பான் அவர்கள், ஏனில்லை? ஆனால் அதற்கு யாரும் சாட்சியில்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர் தொழுவதில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு இத்பான் அவர்கள், ஏன் இல்லை? ولا صلوٰة له அவரது தொழுகை தொழுகையே அல்ல. என்று கூறினார்கள். (தற்கால மவ்லவிமார்களைப் போன்று அக்காலத்திலும் சிலரிடம் கடுமை இருந்திருக்கும் போலும்).

அன்னார் கூறினார்கள்: இத்தகைய மக்களைக் குறித்தே அல்லாஹ் தன் தரப்பிலிருந்து ஏதாவது கூறுவதிலிருந்து என்னை தடுத்து விட்டான்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 230. 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

உள்ளத்தின் நிலையை அல்லாஹ்வே அறிவான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அல்லாஹ் தடுத்திருந்தான். ஆனால் இந்த ஆலிம்களின் கருத்தின் படி இவர்களுக்கு அல்லாஹ் சான்று வழங்கியுள்ளான். அல்லாஹ்வின் பெயரால் அநீதி இழைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளான். குறிப்பாக பாக்கிஸ்தானிய ஆலிம்களுக்கு அனுமதி வழங்கியுள்ளான்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன் மாலிக் பின் துஹ்ஷும் பற்றி தவறாகப் பேசப்பட்டபோது, لا تسبوا أصحابي அதாவது என்னுடன் இருப்பவர்களை ஒருபோதும் தவறாக பேசாதீர்கள் என்று அன்னார் கூறினார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 406. 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போரிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த போது மதீனாவிலிருந்து சிறிது தொலைவிலுள்ள ஒரு இடமான ஸிஅவான் என்ற இடத்தில் தங்கினார்கள்.

அவர்களுக்கு கேடு விளைவிக்கும் பள்ளிவாயில் குறித்த வஹி இறங்கியது. அன்னார் மாலிக் பின் துஹ்ஷும் மற்றும் மஅன் பின் அதி இருவரையும் கூப்பிட்டு அனுப்பினார்கள். இருவரையும் அந்த கேடு விளைவிக்கும் பள்ளிவாயிலுக்குச் செல்லுமாறு கூறினார்கள். மாலிக் பின் துஹ்ஷும், மஅன் பின் அதி இருவரும் ஸாலும் கோத்திரத்தாரிடம் சென்றார்கள். ஏனெனில் அது மாலிக் பின் துஹ்ஷும் அவர்களுடைய கோத்திரமாக இருந்தது. மாலிக் பின் துஹ்ஷும் ஹஸ்ரத் அமன் அவர்களிடம்,

எனக்கு சிறிது அவகாசம் கொடுங்கள். நான் வீட்டில் இருந்து நெருப்பு எடுத்து வருகிறேன் என்று கூறி அவர் சில காய்ந்த பேரீச்ச மரப் பட்டைகளில் நெருப்பை மூட்டி எடுத்து வந்தார். இருவரும் மஸ்ஜித் ஸரார் என்ற கேடு விளைவிக்கும் பள்ளிவாயிலுக்குச் சென்றனர். அறிவிப்பின்படி மக்ரிப் மற்றும் இஷாவுக்கு இடையில் சென்று சேர்ந்தனர். அங்கு சென்று அதற்கு நெருப்பு வைத்து அதை பூமியோடு பூமியாக்கினார்கள்.

(ஷரஹ் சர்கானி அலா முவாஹிபுத் துன்யா தொகுதி 4 பக்கம் 97,98. 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஏதாவது தவறான எண்ணத்தின் காரணத்தால் நாம் சஹாபாக்கள் மீது தப்பெண்ணம் கொள்ள முடியாது.

இவர் தவறான வழியில் போய் விட்டார். இவர் நயவஞ்சகர் என்று மக்களில் சிலர் கருதினார்கள். ஆனால் அல்லாஹ்வின் கட்டளையினால் அவர்கள்தான் நயவஞ்சகர்களின் தலைமையகத்தை அழிப்பவராக விளங்கினார்கள்.

அல்லாஹ் இந்த சஹாபாக்களின் தகுதியை உணர்த்துவானாக. மேலும் நம்மை நாமே ஆய்வீவ செய்யவும் வாய்ப்பளிப்பானாக. அதாவது அல்லாஹ்வின் கட்டளைகள் என்னவென்றும் அதனை எந்த அளவுக்கு நாம் நிறைவேற்றுகிறோம் என்ற ஆய்வு செய்பவராக நம்மை ஆக்குவானாக.

# ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஜெர்மனி சுற்றுப் பயணம் 2017

23 ஏப்ரல் 2017 ல் ஜெர்மனியின் செயற்குழு கூட்டத்தில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கலந்து கொண்டு, பல்வேறு செயலர்கள் செய்கின்ற பணிகளைப் பற்றி கேட்டு அவர்களுக்கு வழங்கிய வழிகாட்டல்கள்

(அறிக்கை: அப்துல் மாஜித் தாஹிர், கூடுதல் வகீலுத் தஃப்ஸீர், இலண்டன்)

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

ஜெர்மன் ஜமாஅத்தின் திருமண செயலர் அவர்கள் தனது அறிக்கையை ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம் எடுத்துக் கூறினார்கள்.

இங்கு திருமண உறவுகள் தீர்மானிக்கப்படுவது மிகவும் குறைவாகவே இருக்கின்றது. அதில் பல பிரச்சனைகள் உள்ளன. குறிப்பாக இளைஞர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கின்றது என்று திருமண செயலர் அவர்கள் கூறினார்கள்.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

இந்த பிரச்சனையானது உலகின் எல்லா பகுதிகளிலும் இருக்கின்றது. ஒரு புறம் திருமண வயதுடைய இளைஞர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கின்றது. இளம் பெண்களுக்குத் திருமணமாக வேண்டியிருக்கின்றது. இதற்காக நான் சர்வதேச அளவில் ஒரு திருமண குழுவை ஏற்படுத்தியிருந்தேன்.

பிறகு தஃப்ஸீர் துறை என்ற ஒரு துறை இருக்கின்றது. அந்த துறைக்கு ஒவ்வொரு திருமண செயலரும் அவர்களிடமுள்ள விபரங்களை அதாவது அவர்களது ஜமாஅத்திலுள்ள திருமண வயதுடைய ஆண்கள் மற்றும் பெண்கள் பற்றிய முழு விபரங்களையும் அனுப்ப வேண்டும் என்று நான் கூறியிருந்தேன்.

நீங்கள் அவ்வாறு அனுப்பி வைத்தீர்களா? என்று ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் திருமண செயலரிடம் கேட்டார்கள். அதற்கு இதுவரை நாங்கள் எங்களிடமுள்ள விபரங்களை அனுப்பி வைக்கவில்லை. ஏனென்றால், சட்ட ரீதியாக சில நிர்பந்தங்கள் உள்ளன என்று கூறினார்.

**அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

அவ்வாறு சட்ட ரீதியாக என்ன நிர்பந்தங்கள் உள்ளன என்று எனக்கு புரியவில்லை. உங்களிடமிருந்து எனக்கும் இது தொடர்பாக பதில் வந்திருந்தது. அதில், நாங்கள் விபரங்களை அனுப்பி வைக்காததற்குக் காரணம் என்னவென்றால் ஒவ்வொரு நபரிடமும் தனிப்பட்ட முறையில் கேட்காமல் அவருடைய விபரங்களை இன்னொரு நாட்டிற்கு அனுப்பி வைக்க முடியாது என்ற சூழ்நிலை இருக்கிறது என்று நீங்கள் எழுதியிருக்கின்றீர்கள். ஆனால் ஏனைய நாட்டிலுள்ளவர்கள் தங்களுடைய விபரங்களை அனுப்பி வைக்கின்றனர். நீங்கள் ஏன் அனுப்பாமல் இருக்கின்றீர்கள் என்று எனக்குப் புரியவில்லை.

**ஓர் அஹ்மதி பைஅத் செய்யும் போது அஹ்மதியாகவே இருக்கின்றார். நீங்கள் ஓர் அஹ்மதியல்லாதவருக்கு உங்களுடைய விபரங்களை அனுப்பி வைக்கவில்லை. மாறாக, ஓர் அஹ்மதிக்குத்தான் அனுப்பி வைக்கின்றீர்கள். அவ்வாறிருக்கும் போது ஓர் அஹ்மதி உங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் ஏதாவது வழக்கு தொடுப்பார் அல்லது தனது சொந்த புள்ளி விபரங்களை அனுப்புவதன் காரணமாக ஏதாவது உங்களுக்குப் பிரச்சனை ஏற்படும் என்று நீங்கள் ஏன் கருதுகின்றீர்கள்?**

நீங்கள் கூறுகின்ற இந்த விஷயம் ஒரு சாக்குப்போக்கு மட்டுமே ஆகும். நீங்கள் இதற்கு முன்னர் எனக்கு எழுதிய பதிலையும் நான் ஏற்கனவே படித்து விட்டேன். எனவே நீங்கள் கூறக்கூடிய காரணம் எனது பார்வையில் பொருத்தமானதாக இல்லை. இது வெறும் சாக்குப்போக்கு மட்டுமே ஆகும். நீங்கள் ஒருவரிடமிருந்து அவரது சொந்த விபரங்களை கேட்டுப் பெறும் போது இவ்வாறு கூறிவிட வேண்டும்.

அதாவது நீங்கள் இந்த நாட்டிலேயே திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றீர்களா? உங்களுடைய இந்த விபரங்களை இங்கேயே வைக்க வேண்டும் என்று நீங்கள் கூறுகின்றீர்களா? அல்லது உங்களுடைய விபரங்களை தலைமையக கமிட்டிக்கு அனுப்புவதில் உங்களுக்கு எதுவும் ஆட்சேபனை இல்லையே? என்ற விஷயங்களை அவர்களிடம் கேட்டு விட்டு பிறகு அந்த விபரங்களை எழுதி அனுப்பியிருக்கலாம் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

அதற்கு திருமண செயலர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். நாங்கள் ஏற்கனவே ஒவ்வொருவருக்கும் கொடுக்கின்ற படிவத்தில் இதற்கென்று ஒரு பகுதி வைத்திருக்கின்றோம். அதனை மக்கள் பூர்த்தி செய்வதே இல்லை என்று கூறினார்.

**அப்போது ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

இந்த பணி எப்போது நடைபெறும் என்றால் ஜமாஅத்திலுள்ள தலைவர்கள் செயல் துடிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறே ஜமாஅத்திலுள்ள திருமண செயலர்களும் துடிப்புடன் செயலாற்றக்கூடியவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மட்டத்திலும் திருமண துறையுடன் சம்பந்தப்பட்ட திருமண செயலர்களின் பணியை துடிப்புள்ள பணியாக மாற்ற வேண்டும்.

அவ்வாறு அனைத்து செயலர்களையும் செயல்பட வைக்கும் பணியும் உங்களுடையதாகவே இருக்கின்றது. உங்களுக்குக் கீழுள்ள திருமண செயலர்களிடம் நீங்கள் வேலை வாங்கவில்லை. அவ்வாறு நீங்கள் ஏன் செய்யாமல் இருந்தீர்கள்? என்று ஹுஸூர் அவர்கள் கேட்டார்கள்.

**பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

**இங்கு ஜெர்மனியில் உங்களுக்கு ஒவ்வொரு விஷயத்தையும் இங்கேயே அமுக்கி வைக்கின்ற பழக்கம் இருக்கிறது. உங்களைப் போன்ற படித்த நபராக இருந்தாலும் சரி; அல்லது படிக்காத நபராக இருந்தாலும் சரி ஒவ்வொருவருடைய மூளையிலும் இந்த விஷயம் பதிந்திருக்கின்றது.**

**அதாவது இது நம்முடைய நாட்டிலுள்ள விவகாரங்களாகும். இது நம்மிடமே இருக்க வேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள். நாம் நமது தனித்தன்மையை எப்போதும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்.**

அமெரிக்கா மற்றும் கனடா உங்களை விட பெரிய நாடுகளாக இருக்கின்றன. அங்கு இந்த பணிகள் செய்மையாக நடைபெறுகின்றன. அங்கிருந்து திருமணம் சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களும் நமக்கு வந்து கொண்டிருக்கின்றன.

எனவே நீங்களும் பணி செய்வதாக இருந்தால் நூறு வழிமுறைகளை அதற்கென்று நீங்கள் தயார் செய்யலாம். நூறு வழிமுறைகளைப் பின்பற்றியவாறு நீங்கள் இந்த பணிகளைச் செம்மையாகச் செய்ய முடியும். ஆனால் இதைச் செய்ய முடியாது. அதைச் செய்ய முடியாது என்று பதில் கூறுவது எனது பார்வையில் சாக்குப்போக்குகளே ஆகும்.

எனவே நீங்கள் சுயமே உங்களது செயல் துடிப்புள்ள செயலராக மாற முயற்சி செய்யுங்கள். நீங்களே சரியாக இல்லாத போது ஜமாஅத் சகோதர்களிடமிருந்து நீங்கள் எதனை எதிர்பார்க்க முடியும்? என்று ஹுஸூர் அவர்களிடம் கேட்டார்கள்.

அடுத்து தஹ்ரீகே ஜதீது செயலர் தனது துறை சம்பந்தப்பட்ட அறிக்கையை ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு எடுத்துக் கூறினார்.

ஜெர்மனியில் தஹ்ரீகே ஜதீது சந்தாவில் பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கை 34,000 ஆக இருக்க வேண்டும் என்று எங்களுக்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. அந்த இலக்கை நாங்கள் முழுமை செய்து விட்டோம்.இப்போது அடுத்த வருடத்திற்கான இலக்காக 35,000 பேரை தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் பங்கு பெற வைக்க வேண்டும் என்று எங்களுக்கு இலக்கு வழங்கப்பட்டுள்ளது என்று ஹுஸூர் அவர்களிடம் கூறினார்.

**அதைக் கேட்டு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

**நான் ஏற்கனவே இதனையும் கூறியிருந்தேன். அதாவது ஒருவர் ஒரு யூரோ கொடுத்தோ அல்லது ஐம்பது சென்ட் கொடுத்தோ சந்தாவில் பங்கு பெற்றாலும் அவரையும் சந்தாவில் இணைத்துக் கொள்ள வேண்டும்.**

**நிபந்தனை என்னவென்றால் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய முயற்சி செய்ய வேண்டும். மக்களுக்கு பொருள் தியாகம் செய்வதற்கான பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். நீங்கள் பெரும் பெரும் தொகையை பெற வேண்டும் என்ற எந்த நிபந்தனையும் இல்லை. ஆனால் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும்.**

ஒவ்வொருவருக்கும் நாமும் பொருள் தியாகத்தில் பங்கு பெற வேண்டும் என்ற உணர்வு இருக்க வேண்டும். மேலும் ஜமாஅத்திலுள்ள பொருள் தியாகத்தின் முக்கியத்துவம் பற்றி தெரிந்திருக்க வேண்டும்.

**வஸிய்யத் துறை:**

வஸிய்யத் செயலர் தனது துறை சம்பந்தப்பட்ட அறிக்கையை ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு எடுத்துக் கூறினார்கள்.

அவர்கள் இப்போது இங்கு வஸிய்யத் செய்துள்ளவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 11,589 ஆகும் என்று கூறினார்கள்.

பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில், இங்கு சம்பாதிப்பவர்களின் எண்ணிக்கை 14,618 பேர் என்று கூறினார்.

அப்போது ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், இதன் பொருள் என்னவென்றால், நீங்கள் வஸிய்யத் சந்தாவில் ஐம்பது சதவிகிதம் பேரைப் பங்கு பெற வைக்க வேண்டும் என்ற இலக்கை அடைந்து விட்டீர்கள் என்று கூறினார்கள்.

சம்பாதிப்பவர்களின் எண்ணிக்கை 14,000 என்றால் மீதமுள்ள 28,000 பேர் வேலையில்லாமல் அமர்ந்திருக்கிறார்களா? என்று ஹுஸூர் அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு வஸிய்யத் செயலர், கட்டாயச் சந்தா செலுத்துபவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 19,400 ஆகும். இதில் பாக்கெட் மணியிலிருந்து சந்தா கொடுப்பவர்கள் மற்றும் சம்பாதிக்கின்றவர்கள் ஆகிய இருவருமே அடங்குவர் என்று கூறினார்.

**இதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

பாக்கெட் மணியிலிருந்து சந்தா கொடுப்பவர்கள் மீது சந்தா கடமையாகிவிட்டது என்று கூற முடியாது. எவராவது வஸிய்யத் செய்கின்றார் என்றால் அவர் வஸிய்யத்தில் இருப்பார்.

**ஆனால் எவர் பாக்கெட் மணியைப் பெறுகின்றாரோ அல்லது வீட்டிலுள்ள பெண்ணாக இருக்கின்றாரோ அல்லது குழந்தையாக இருக்கின்றாரோ அல்லது ஒருவருக்கு அன்பளிப்பாகக் கூட பாக்கெட் மணி கிடைக்கின்றது. அப்படிப்பட்டவர்கள் மீது சந்தா ஆம் கட்டாய கடமையாகாது. ஏனென்றால் அவர்கள் சம்பாதிப்பவர்கள் அல்ல. சம்பாதிப்பவர்கள் என்ற பட்டியலில் வேலை செய்பவர்கள், வியாபாரம் செய்பவர்கள், குத்தகைக்காரர்கள் அல்லது ஏதாவதொரு வகையில் மாதந்தோறும் வருமானத்தைப் பெற்றுக் கொண்டிருப்பவர்களே அடங்குவர். இவர்களில் மாணவர்கள் மற்றும் வீட்டிலுள்ள பெண்களைப் பங்கு பெற வைக்க முடியாது.**

நீங்கள் மாணவர்கள் மற்றும் வீட்டிலுள்ள பெண்களை சம்பாதிக்கின்றவர்களின் பட்டியலில் சேர்த்து விட்டீர்கள் என்றால் அது சரியல்ல. ஏனென்றால் அவர்களது கணவர் அவர்களுக்கு 200 யூரோ கொடுக்கின்றார். அல்லது ஏதாவதொரு குழந்தைக்கு 100 யூரோ பாக்கெட் மணியாகக் கிடைக்கின்றது என்றால் அவர்களை நீங்கள் சம்பாதிப்பவர்களின் பட்டியலில் சேர்க்க முடியாது.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்:**

இங்கு உங்களுடைய ஒட்டுமொத்த ஜமாஅத்துடைய எண்ணிக்கை 43,000 – 44,000 வரை இருக்கின்றது. ஆனால் நீங்கள் கூறுவது என்னவென்றால், இதில் 14,618 பேர் தான் சம்பாதிப்பவர்களாக இருக்கின்றார்கள். எனவே தான் நான் கேட்டேன். அப்படியானால் மீதமுள்ள நபர்கள் வேலையில்லாமல் சாப்பிட்டு வருகின்றார்களா?

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம் ஜெர்மனி நாட்டின் சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா அவர்கள், இங்குள்ள குத்தாம் எண்ணிக்கை 10,000 ஆகும். அவர்களில் 5000 பேர் சம்பாதிக்கக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்று கூறினார்கள்.

பிறகு சதர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் அவர்கள், தம்மிடமிருக்கின்ற புள்ளிவிவரத்தின் அடிப்படையில் அங்குள்ள அன்ஸார் எண்ணிக்கை 5600 ஆகும் என்றும் அதில் சம்பாதிப்பவர்களின் எண்ணிக்கை 4000 ஆகும் என்று கூறினார்கள்.

அப்போது ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், இதன் பொருள் என்னவென்றால் இந்த 14,000 பேரில் எஞ்சியுள்ள 5000 பேர் கெண்களாக இருக்கின்றார்கள். அவ்வாறென்றால் 5000 பேர் சம்பாதிக்கின்றார்களா? என்று கேட்டார்கள்.

அதற்கு திருமண செயலர் அவர்கள், என்னிடமிருக்கின்ற பட்ஜெட் ஜமாஅத்துகள் அனுப்பியிருப்பதே ஆகும் என்று கூறினார். அதற்கு ஹுஸூர் அவர்கள், இதன் பொருள் என்னவென்றால் குத்தாமுல் அஹ்மதிய்யாவும் தனது மட்டத்தில் சரியாக பணியாற்றவில்லை. ஏனென்றால் அவர்களில் எத்தனை பேர் சம்பாதிப்பவர்களாக இருக்கின்றனர் என்று அவர்களுக்கே சரியாகத் தெரியவில்லை.

**இவ்வாறு அன்சாருல்லாஹ்வும் தனது மட்டத்தில் சரியாகப் பணியாற்றவில்லை. ஏனென்றால் அவர்களுக்கும் தம்மில் எத்தனை பேர் சம்பாதிப்பவர்களாக இருக்கின்றனர் என்ற விவரம் தெரியவில்லை.**

**பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வஸிய்யத் செயலரைப் பார்த்து கூறினார்கள்:**

உங்களிடமுள்ள இந்த அறிக்கை குத்தாம் மற்றும் அன்சாருடைய அறிக்கையுடன் ஒத்துப் போகவில்லை. எனவே ஒன்று நீங்கள் குறிப்பிடுகின்ற எண்ணிக்கை தவறானதாக இருக்க வேண்டும். அல்லது அந்த இரண்டு அமைப்புகளும் சரியாகப் பணி செய்யாமல் இருக்கின்றது.

பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஜெர்மன் ஜமாஅத்துடைய ஒட்டுமொத்த புள்ளிவிபரங்களையும் கேட்டுப்பெற்று அதனை ஆய்வு செய்தார்கள். அதிலிருந்தும் 7 வயதிற்கு குறைவாக இருக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கை ஏறக்குறைய 5000 ஆக இரக்கிறது என்று தெரிய வந்தது. அத்ஃபால் மற்றும் நாஸிராத்துடைய எண்ணிக்கை 6500 என்று தெரிய வந்தது. இதைத்தவிர மாணவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 4000 ஆகும் என்றும் தெரிய வந்தது.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

இதைத் தவிர்த்து லஜ்னாவுடைய எண்ணிக்கை 13,000 ஆகும். இந்த 13,000 என்ற எண்ணிக்கையிலிருந்து 20 வயது வரை உள்ள பெண்களை வெளியேற்றி விட்டாலும் கூட மீதி 7000 என்ற எண்ணிக்கை வருகிறது. இவ்வாறு ஒட்டுமொத்தமாக இந்த எண்ணிக்கை அதிகபட்சம் 18,000 ஆக ஆகின்றது. ஆனால் வஸிய்யத் செயலர் எனக்குத் தந்திருக்கின்ற அறிக்கையின் அடிப்படையில் இந்த எண்ணிக்கை 29,000 ஆக ஆகிவிட்டது. எனவே தான் நான் கூறினே. ஒன்று, ஜமாஅத்துடைய அமைப்பு இந்த அளவு செயல்துடிப்புள்ளதாக இல்லை.

அதாவது கிளை அமைப்புகளுக்கு அவர்களிடம் இணைந்திருப்பவர்கள் எங்கெங்கு இருந்தெல்லாம் வந்திருக்கின்றார்கள் என்ற விவரங்கள் சரியாகத் தெரியாமல் இருக்கின்றது. **கிளை அமைப்புகள் ஜமாஅத் அமைப்பை விட அதிக செயல் துடிப்புள்ளதாக இருக்க வேண்டும்.**

அப்போது சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஜெர்மனி அவர்கள் கூறினார்கள். நாங்கள் தேசிய செயற்குழு கூட்டத்தில் இதன் பக்கம் கவனமூட்டினோம். அதன் அடிப்படையில் எங்களுடைய புள்ளிவிபரம் ஒவ்வொரு மாதமும் மாற்றப்படுகிறது. இதன் அடிப்படையில் பார்க்கின்ற போது, ஜமாஅத்தினுடைய புள்ளிவிபரங்கள் சரியானதாக இருக்கின்றதா? இல்லையா? என்பதைப் பார்க்க வேண்டியிருக்கின்றது.

ஏனென்றால் நாங்கள் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் புள்ளிவிபரங்களைப் பெறுகின்ற போது ஒவ்வொரு காதிமையும் நேரடியாகவே கண்டு பேசுகின்றோம். எங்களுடைய பட்ஜெட்டும் கூட ஒவ்வொரு காதிமையும் சந்தித்த பிறகே தயாராகின்றது என்று கூறினார்கள்.

**அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்அவர்கள் கேட்டார்கள்:**

உங்களிடமுள்ள எய்ம்ஸ் அட்டையில் உள்ள விவரங்கள் மிகத் தெளிவாகவே இருக்கும். அந்த எய்ம்ஸ் அட்டையை நீங்கள் சோதித்துப் பார்த்தீர்களா ? ஆக ஒவ்வொரு கிளை அமைப்பின் தரப்பிலிருந்து தான் உங்களுக்கு அனுப்பப்படுகிறது என்பதை நீங்கள் சரிபார்த்தீர்களா?

அப்போது ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம், எய்ம்ஸ் அட்டையில் உள்ள விபரங்களைச் சரிபார்த்து ஜமாஅத் சதர் சாஹிப் தரப்பிலிருந்து செய்யப்படுகின்றது என்று கூறப்பட்டது.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

உங்களிடளிமிருந்து எந்தவோர் அறிக்கை வந்தாலும் அதில் குத்தாமுல் அஹ்மதிய்யாவுடைய கையெழுத்தும் இருக்க வேண்டும். அன்ஸாராகவோ அல்லது லஜ்னாவாகவோ இருந்தால் அந்தந்த துறை தான் அதற்குப் பொறுப்பாளியாக இருக்கின்றது. அவர்கள் தான் அந்த அட்டையை சரிபார்க்க வேண்டும். அதிலுள்ளள விபரங்கள் சரியாக இருக்கின்றதா? என்று பார்க்க வேண்டும்.

ஏனென்றால் ஆண்கள், பெண்கள் இரு தரப்பிலிருந்துமே எனக்கு சில புகார்கள் வந்திருக்கின்றன. அதாவது சந்தேகத்திற்குரிய சில மக்களும் கூட தாங்கள் ஜமாஅத்தில் இணைந்திருப்பதாகக் காட்டிக் கொள்கின்றனர். சில விவகாரங்கள் இவ்வாறும் இருக்கின்றன.

**அதாவது ஜமாஅத்தின் தலைவர்கள், அஹ்மதியல்லாதவர்களை அல்லது ஜமாஅத்திலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு விலக்கப்பட்டவர்களை அவர்கள் யார் என்று பார்க்காமலேயே அவர்கள் அஹ்மதிகள் தான் என்று உறுதிபடுத்தி விடுகின்றனர்.**

எனவே இவ்விஷயத்தில் ஒருவரை மட்டும் நம்பியிருப்பது சரியானதல்ல. பல்வேறு அமைப்புகள் இதற்காகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு விதிமுறைகள் மூலமாக ஒரு குறிப்பிட்ட நபர் யார் என்று உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**பாகிஸ்தான் தலைமையகத்திலும் இதுபோன்ற வழிமுறைதான் இருந்து வருகிறது. அதாவது நாஸிர் உமூரே ஆமா அவர்களின் அறிக்கையை மட்டும் வைத்து நாம் இவர் ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்லது சாராதவர் என்று நாம் முடிவெடுத்து விடுவதில்லை.**

மாறாக, ஒருவர் காதிமாக இருந்தால் சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா அவர் காதிம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அல்லது அவர் நாஸிராக இருந்தால் எதுவரை சத்ர் அன்ஸாருல்லாஹ் தரப்பிலிருந்து அவர் நாஸிர் மற்றும் அஹ்மதி என்பது உறுதிப்டுத்தப்படவில்லையோ அதுவரை அந்த அட்டை வழங்கப்படுவதில்லை.

எனவே நாம் நாஸிர்களை மட்டும் நம்பியிருப்பதில்லை. அவ்வாறிருக்கும் போது சத்ர் ஜமாஅத் அவர்களுடைய ஒப்புதலை மட்டும் வைத்து எவ்வாறு நீங்கள் முடிவெடுத்தீர்கள்? எனவே இந்த அமைப்பை சரி செய்ய வேண்டிய தேவையிருக்கின்றது. இப்போது இது உங்களுடைய பணியாக இருக்கின்றது. அதாவது சதர் அன்ஸார், சதர் குத்தாம்

மற்றும் சத்ர் லஜ்னா ஆகியோர் ஒன்றாக அமர்ந்து இந்த பட்டியலை மீண்டும் சரிபார்க்க வேண்டும். அதில் யார் அஹ்மதிகள், யார் அஹ்மதிகள் அல்ல என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று ஹுஸூர் அவர்கள் கட்டளையிட்டார்கள்.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

ஜமாஅத்துடைய தலைவர்கள் தொடர்பாகவும் ஒன்றிரண்டு முறையீடுகள் வருகின்றன. அதாவது திருமணங்கள் நடைபெறுகின்ற போது அந்த திருமணங்களுக்கு தவறாக சரிபார்ப்பு செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டு அந்த ஜமாஅத் தலைவர்களுக்கு தண்டனையும் வழங்கப்பட்டிருக்கின்றது.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

**அலுவலகத்தில் அமர்ந்து கையெழுத்திடுவதற்காக மட்டும் நீங்கள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படவில்லை. இந்த விஷயத்தை ஜமாஅத்தினுடைய பொதுச் செயலர்களும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது நான் ஒரு பெரிய அந்தஸ்தில் உள்ளேன்.**

**எனவே அலுவலகத்தில் அமர்ந்து கையெழுத்திடுவது மட்டும் தான் எனது பணி என்று அவர் நினைக்கக் கூடாது. அந்த வழிமுறை சரியான வழிமுறையல்ல.**

**வெளியீட்டுத் துறை:**

பிறகு நூல்கள் வெளியீட்டுத் துறையின் செயலர் அவர்கள் தமது அறிக்கையை ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம் எடுத்துக் கூறினார்கள்.

இந்த வருடம் இரண்டு புத்தகங்கள் இதுவரை அச்சிடப்பட்டிருக்கின்றன. ஒரு புத்தகம் அச்சிட்டு வந்து விட்டது. இன்னொன்று வரவிருக்கின்றதுது. அந்த புத்தகத்தினுடைய வடிவமைப்பு தயாராகிவிட்டது என்று கூறினார்கள்.

அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் நல்லது என்று கூறினார்கள்.

**செகரட்டரி மால்:**

கூடுதல் செகரட்டரி மால் அவர்கள் தமது அறிக்கையை ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம் எடுத்துக் கூறினார்கள். அதாவது பட்ஜெட் போன்றவற்றை தயார் செய்வது தொடர்பாக ஒவ்வொரு ஜமாஅத்தைச் சார்ந்த செகரட்டரி மாலிடம் நாங்கள் தொடர்பு கொள்கின்றோம் என்று கூறினார்.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

**செகரட்டரி மால் அவர்கள் பட்ஜெட்டை தயார் செய்யும் போது ஒவ்வொரு நபரது வீட்டிற்கும் நேரடியாகச் செல்ல வேண்டும்.**

**மேலும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

**அசல் விஷயம் என்னவென்றால், பொருள் தியாகத்தின் முக்கியத்துவம் தொடர்பாக அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். தர்பிய்யத் செயலரின் பணியும் இதுவாகும்.**

**அதாவது அவர்கள் மக்களுக்கு பொருள் தியாகத்தின் முக்கியத்துவம் பற்றி உணர்த்திக் கொண்டே இருக்க வேண்டும். பொருள் தியாகம் பற்றிய உயர்வு ஏற்பட்டு விட்டால் மற்ற விஷயங்களும் தானாகவே சரியாகி விடும்.**

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் செகரட்டரி மால் அவர்களிடம், உங்களிடம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட பட்ஜெட் தொடர்பான படிவம் இருக்கின்றதா? என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள், இங்கு ஜெர்மனியில் ஒருவருக்கு கிடைக்கக்கூடிய சராசரி சம்பளம் என்பது 884 யூரோ ஆகும். ஆனால் மக்கள் தங்களுக்கு வரக்கூடிய உண்மையான வருமானத்திற்கு ஏற்ப பட்ஜெட் எழுதுவதில்லை என்பதை எங்களால் உணர முடிகியது. ஆனால் இதற்காக நாங்கள் திட்டம் வகுத்து வருகிறோம். ஜமாஅத் சகோதரர்களுக்குக் கூறுகின்றோம்.

அதாவது கட்டாயச் சந்தாவை அசல் வருமானத்திற்கு ஏற்ப எழுத வேண்டியது ஏன் அவசியமானது என்பதை பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறுகின்றோம். அடுத்த ஆமிலாவினுடைய கூட்டத்தில் இந்த திட்டத்தை நாங்கள் எடுத்து வைக்க இருக்கின்றோம் என்று ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம் கூறினார்கள்.

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

**எவர்கள் தங்களது பொருளாதார நிலைமைகள் காரணமாக சந்தா கொடுக்க முடியாமல் இருக்கின்றார்களோ அவர்கள் எங்களால் இவ்வளவு சந்தா கொடுக்க முடியாது என்பதைத் தெரிவிக்க வேண்டும். ஆனால் எங்களுக்கு வருமானம் இவ்வளவு தான் என்று பொய்யாகக் கூறினால் அது தவறாகும். அத்தகைய வருமானத்தில் பரக்கத்தும் ஏற்படப்போவதில்லை.**

தர்பிய்யத் செயலர்களும், ஜமாஅத்திலுள்ள செகரட்டரி மால்களும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஜமாஅத் தலைவர்கள் ஒவ்வொருவரிடமும் தொடர்பு கொண்டு கண்டிப்பாக அதைப் பெற்றே ஆக வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் ஜமாஅத்திற்கு இல்லை.

எனவே **நீங்கள் உங்களுடைய வருமானத்தை மறைக்காதீர்கள். அவ்வாறு நீங்கள் வருமானத்தை மறைத்தால் அதில் பரக்கத் முடிந்து விடும் என்பதை அவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்.**

**அதற்குப் பிறகும் அவர்கள் கொடுக்காமல் இருந்தால் நீங்கள் உங்கள் வருமானத்திற்கு ஏற்ப சந்தா கொடுக்க முடியவில்லை என்றால் எங்களால் இவ்வளவு சந்தா கொடுக்க முடியாது அல்லது எங்களால் இவ்வளவு தான் கொடுக்க முடியும் என்பதை காலத்தின் கலீஃபாவிற்கு எழுதி அவர்களிடமிருந்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று நீங்கள் அவர்களிடம் கூறுங்கள்.**

**இவ்வாறு எனக்கு பல கடிதங்களும் வருகின்றன. ஜெர்மனியிலிருந்தும் இதுபோன்ற கடிதங்கள் வருகின்றன. அதாவது இந்த அளவு சந்தாவை எங்களால் கொடுக்க முடியாது.**

**எனவே எங்களது சந்தாவை நீங்கள் மன்னியுங்கள். அல்லது எங்கள் வருமானத்திற்கும் குறைவாகவே எங்களால் சந்தா கொடுக்க முடியும் என்று எழுதி அவர்கள் அனுமதி பெற்றுக் கொள்கின்றார்கள். நானும் அவர்களுக்கு அனுமதி வழங்கி விடுகின்றேன்.**

*(தொடரும் - இன்ஷா அல்லாஹ்...)*

EDITOR
M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 14 June 2018 Issue No. 24

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

எனவே, அந்த புனித ஆன்மா கொண்டு வந்த ஷரீஅத் என்னும் இஸ்லாமிய மார்க்கச் சட்டங்களையும் அவர்களின் ஆன்மீக அருட்கொடைகளையும் இறுதிநாள் வரை நிலைத்திருக்கச் செய்வதன் மூலம் அவர்கள் என்றென்றும் உயிரோடு இருக்கக்கூடிய அடித்தளத்தை இறைவன் நிலைநாட்டினான். இறுதியாக அன்னாரின் ஆன்மீக அருட்கொடையை பெற்றதனால் அவர்களது ஆன்மீக ஒளியாக இறைவன் இவ்வாக்களிக்கப்பட்ட மஸீஹை உலகில் அனுப்பியுள்ளான்.

இஸ்லாம் மார்க்கம் என்னும் கட்டடம் முழுமை அடைவதற்கு இவரது வருகை அவசியமானதாயிருந்தது. ஏனெனில் மூஸா (அலை) அவர்களின் சமுதாயத்தினருக்கு கொடுக்கப்பட்டது போல் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சமுதாயத்திற்கும் ஆன்மீக முறையில் ஒரு மஸீஹ் கொடுக்கப்படாதவரை இவ்வுலகம் முடியாமலிருப்பது அவசியமானதாக இருந்தது. اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ இறைவா! நீ எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவாயாக என்ற வசனம் சுட்டிக் காட்டுகிற்து. (1:6,7)

முற்காலத்து சமுதாயங்கள் இழந்து விட்ட அருட்கொடைகளை மூஸா நபி (அலை) அவர்கள் பெற்றார்கள். மேலும் மூஸா நபி (அலை) அவர்களின் சமுதாயம் இழந்து விட்ட அந்த அருட்கொடைகளை ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பெற்றார்கள். தற்போது முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சமுதாயமானது மூஸா நபியின் சமுதாயத்தின் பிரதிநிதியாக இருக்கிறது. ஆயினும் முஹம்மதிய சமுதாயமானது மூஸா நபி (அலை) அவர்களின் சமுதாயத்தை விட ஆயிரம் மடங்கு சிறப்புள்ளதாகும். மூஸா நபியின் சமுதாயத்தில் தோன்றிய இப்னு மர்யத்தை விட அவருக்கு ஒப்பானவராக முஹம்மதிய சமுதாயத்தில் தோன்றிய இப்னு மர்யம் மிக உயர்ந்தவராவார்.

காலத்தைப் பொருத்தவரை மூஸா நபி அவர்களுக்குப் பின் பதினான்காவது நூற்றாண்டில் மஸீஹ் இப்னு மர்யம் தோன்றியதைப் போல் முஹம்மது (ஸல்) அவர்களுக்குப் பின் பதினான்காவது நூற்றாண்டில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றியுள்ளார்.

அது மட்டுமல்லாமல் மர்யமின் மகன் மஸீஹ் தோன்றிய போது யூதர்களின் நிலை இருந்ததைப் போன்றே முஸ்லிம்களின் நிலை இருக்கும்போது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றியுள்ளார். நானே அந்த மஸீஹ்! இறைவன், தான் நாடுவதை செய்கின்றான். அவனோடு சண்டையிடுபவன் அறிவீனனாவான். மேலும் எவர் இறைவனுக்கு எதிராக, அப்படியல்ல; இப்படி நடந்திருக்க வேண்டும் என ஆட்சேபனை செய்கின்றாரோ அவர் அறிவீனராவார். அவ்விறைவன் என்னை பத்தாயிரத்திற்கும் அதிகமான ஒளிமயமான அடையாளங்களுடன் அனுப்பியுள்ளான். அவற்றில் பிளேக் நோயும் ஓர் அடையாளமாகும்.

ஆகவே எவர் என்னிடம் உண்மையான முறையில் பைஅத் என்னும் உடன்படிக்கை செய்து உண்மையான உள்ளத்துடன் என்னைப் பின்பற்றி எனக்கு கீழ்ப்படிவதில் தன்னை அர்ப்பணித்தன் மூலம் தனது எல்லா நாட்டங்களையும் விட்டு விடுகிறாரோ அவருக்காகவே எனது ஆன்மா இந்த ஆபத்தான நாட்களில் பரிந்துரை செய்யும்.

**ஆகவே எனது ஜமாஅத்தை சார்ந்தவர்களாகத் தங்களைக் கருதிக் கொள்ளும் மக்களே! நீங்கள் உண்மையிலேயே இறையச்சத்தின் வழிகளில் காலெடுத்து வைக்கும் போதுதான் வானத்தில் எனது ஜமாஅத்தை சேர்ந்தவர்களாக கருதப்படுவீர்கள். ஆகவே நீங்கள் உங்களது ஐந்து நேரத்தொழுகைகளை இறைவனைப் பார்ப்பது போல் பயபக்தியுடன் தொழுது வாருங்கள். மேலும் உங்கள் நோன்புகளை இறைவனுக்காக முழு மனதுடன் நிறைவேற்றுங்கள். ஸக்காத் கொடுக்க தகுதியுள்ள ஒவ்வொருவரும் ஸக்காத்து செலுத்துங்கள். எவர் மீது ஹஜ் கடமையாக்கப்பட்டிருக்கின்றதோ அவருக்கு எவ்வித தடையும் இல்லையென்றால் ஹஜ் செய்ய வேண்டும்.**

நன்மைகளை அழகுபடுத்தி நிறைவேற்றுங்கள். தீமைகளை வெறுத்து விடுங்கள். தக்வா என்னும் இறையச்சம் இல்லாத எந்தச் செயலும் இறைவனை அடைய முடியாது என்பதை நிச்சயமாக நினைவில் வையுங்கள். **ஒவ்வொரு நன்மையின் ஆணிவேரும் தக்வா என்னும் இறையச்சமேயாகும். ஆகவே எச்செயலில் இந்த வேர் வீணாவதில்லையோ அச்செயல் நிச்சயம் வீண் போவதில்லை.**

சென்ற கால நம்பிக்கையாளர்களுக்கு சோதனைகள் ஏற்பட்டது போல் நீங்களும் பலவகையான துக்கம் துயரங்களால் சோதிக்கப்படுவதும் அவசியமானதாகும். ஆகவே நீங்கள் தடுமாற்றமடையாதிருக்க எச்சரிக்கையாக இருங்கள். **வானத்துடன் உங்களுக்கு உறுதியான தொடர்பு இருக்குமானால், பூமி உங்களுக்கு எவ்வித தீங்கும் விளைவிக்க முடியாது. எப்போதாயினும் உங்களுக்கு ஏதேனும் நஷ்டம் உண்டாகுமெனில் அது உங்களது கையால் உண்டான நஷ்டமே அல்லாமல் உங்கள் பகைவர்களின் கைகளால் உண்டானது அல்ல. இறைவன் உங்களுக்கு என்றென்றும் மறைந்து போகாத கௌரவத்தையும் மதிப்பையும் நிச்சயமாக வானத்தில் அளிப்பான்.**

ஆகவே நீங்கள் அவனை ஒருபோதும் விட்டு விடாதீர்கள். உங்களுக்கு துக்கம் கொடுப்பதும் உங்களது அநேக நாட்டங்களிலிருந்து நீங்கள் இழப்பிற்குரியோராக ஆக்கப்படுவதும் அவசியமானதாகவே இருக்கிறது. ஆகவே நீங்கள் இவற்றைக் கண்டு மனம் கலங்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் அவனது பாதையில் உறுதியாக நிலைத்து நிற்கின்றீர்களா? இல்லையா? என்பதை இறைவன் சோதிக்கின்றான்.

வானத்தில் மலக்குகளும் உங்களை புகழ வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் கொடுமைக்கு ஆளாகும்போது மகிழ்ச்சி அடையுங்கள். நீங்கள் பழித்துரைக்கப்படுவதைக் கேட்டு இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். தோல்வியைக் கண்டு இறைவனோடுள்ள தொடர்பை முறித்து விடாதீர்கள்.

**நீங்கள் இறைவனின் இறுதி ஜமாஅத்தாக இருக்கிறீர்கள். எனவே தன் முழுமைத்தன்மையில் உச்ச எல்லையை அடைந்த நற்பணிகளைச் செய்து காட்டுங்கள். உங்களில் சோம்பலுடையவராய் காணப்படும் ஒவ்வொருவரும் ஓர் அசுத்தமான பொருளைப் போல் ஜமாஅத்திலிருந்து புறந்தள்ளப்படுவார். மேலும் அவர் ஏக்கத்துடன் மரணிப்பார். அவரால் இறைவனுக்கு எவ்வித தீங்கும் விளைவிக்க முடியாது.**

**கவனியுங்கள். உங்களுடைய இறைவன் உண்மையிலேயே இருக்கிறான் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அனைவரும் அவனது படைப்புகளாயிருப்பினும் எவர் இறைவனை தேர்ந்தெடுக்கின்றாரோ அவரையே இறைவனும் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றான். எவர் அவனிடம் செல்வாரோ அவனும் அவரிடம் வந்து விடுகிறான். எவர் அவனை கண்ணியப்படுத்துகின்றாரோ அவனும் அவரை கண்ணியப்படுத்துகின்றான்.**

(ரூஹானி கஸாயின் தொகுதி 19 கிஷ்தி நூஹ் பக்கம் 13–15)

**அடிக்குறிப்பு:** மூஸாவின் காலத்திலிருந்து பதினான்காவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஈஸா தோன்றியதாக யூதர்கள் தங்களது வரலாற்றின் வாயிலாக ஏகமனதாக நம்புகிறார்கள். யூதர்களின் சரித்திரம் காண்க.

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை
(வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண் : *1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad